
காதற்
களிவெண்பா
சி. செந்தமிழ்ச்சேய்


காதற்
களிவெண்பா
சி. செந்தமிழ்ச்சேய்

# காதற்

# களிவெண்பா

புலவர், பொறிஞர்

சி. செந்தமிழ்ச்சேய்

**செந்திற் பதிப்பகம்**

*24, கே.டி.ஆர் நகர், கடற்கரைச் சாலை,*

*கடலூர்—607 001. பேசி : 04142—222950, 224170.*

# நூற்குறி'பு

**(Bibliographical Data)**


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **காதற் களிவெண்பா** |
| ஆசிரியர் | : | **புலவர், பொறிஞர். சி. செந்தமிழ்ச்சேய்**<br>சேயகம், 25/49, துரைசாமி நகர்,<br>கடலூர்— 607 001.<br>பேசி : 04142 — 221970, 98408 44600. |
| பொருள் | : | பாவியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு, நவம்பர் — 2004. |
| உரிமை | : | ஆசிரியர்க்கு |
| தாள் | : | சேசசாயி 14.4 கி.கி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| நூல் அளவு | : | டெமி (Demmy) 1? 8. |
| பக்கம் | : | 102 + X |
| விலை | : | உரூபா **35 — 00** |
| வெளியீடு | : | **செந்திற் பதிப்பகம்,**<br>24, கே.டி.ஆர். நகர்,<br>கடற்கரைச் சாலை, கடலூர் — 607 001.<br>பேசி : 041422 — 22950, 224170. |
| ஒளியச்சு | : | **திரையன் கணினியகம்,**<br>6, ஏ.எல்.சி. வணிக வளாகம்,<br>பாரதி நாலை, கடலூர் — 607001.<br>பேசி: 94435 77036. |
| முகப்பு | : | **பா. இளம்பரிதி.** |
| அச்சீடு | : | **யுனைட்டெட் பைண்ட் கிராபிக்சு,**<br>மைலாப்பூர், சென்னை — 600 004.<br>பேசி : 044 — 24984693, 24661807. |

# பதிப்புரை

**சீ. செந்தில்**
*செந்திற் பதிப்பகம் , கடலூர்.*

கற்றும் இலக்கணத்தைக் காண்பொருளைப் பாடற்குச்
சற்றும் அறியாரே சாற்றிடுவார் — முற்றத்
தெளியார்க் குரைநடையும் செய்யவரு மைத்தாம்
புளுகோர்க்கே வெண்பாப் புலி.

எல்லாந் தமிழென்பார் எங்குந் தமிழென்பார்
சொல்லால் நமையேய்க்கச் சூழ்ந்திடுவார் — பொல்லார்
வினைவே றுரைவேறார் வெட்கநள வெண்பா
இனையகளி வெண்பா இனிது.

ஏதோ ஒருநோக் கெவர்க்கும் இவணுண்டு
தீதார்க்கும் இல்லையெனில் தேவையதே — காதோரம்
வெள்ளை முடியார்க்கும் உள்ளங் கிளர்ந்திடுமே
துள்ளு களிவெண்பாத் தோய்வு.

கற்பனை ஊட்டின்பம் காணற் கருவின்பம்
சொற்றுணை யாகச் சுவைபெருக்கும் — பற்றிகந்தார்
சற்றுக் களிவெண்பாச் சாரின் களியுறுவர்
பற்றலில்பின் பற்றுவிடு பற்று.

நல்ல தமிழ்ச்சொற்கள் நாடின் கிடைத்திடுவ
இல்லை அயற்சொற்கள் எண்ணிடுக — நல்லார்
படைத்தகளி வெண்பாப் பதிப்பிதனால் இல்லை
அடுத்த மகிழ்விற் களவு.

# மண்ணேற்றச் செய்தார் மகிழ்ந்து

முனைவர் இரா. செல்வக்கணபதி,
சென்னை.

அன்று புகழேந்தி ஆக்கி அளித்திட்டார்
நன்று நளவெண்பா நற்றமிழில் — இன்றுநற்
சிந்தைக் கினியநம் செந்தமிழ்ச்சேய் அவ்வழியில்
தந்தார் களிவெண்பா தான்.

இன்பப் பொருளியைய இன்பாவால் செந்தமிழ்
அன்னைக்கோர் ஆரம் அமைத்திட்டார் — முன்னம்
அழகூடு பாநூ றளித்திட்ட செம்மல்
மொழிவாழச் செய்தார் முயன்று.

வெண்பாவால் ஒன்றை விளக்கி உரைத்திடுதல்
எண்மையென எண்ணல் இயைபாமோ — நண்பரிவர்
தண்ணீரில் மீன்போற் றமிழில் விளையாடி
மண்ணேற்றச் செய்தார் மகிழ்ந்து.

எத்தனை பேர்படித் தெண்ணம் மகிழ்ந்திடுவர்
எத்தனைபேர் இந்நூலை ஏற்றிடுவர் — எத்தனை
காசுவரும் என்று கணக்கிட்டா நம்முன்னோர்
ஆசிலா நூற்செய்தார் அன்று.

தமிழகம் இந்நூலைத் தம்முடி மீதேற்(று)
இமிழ்கடல்சூழ் வையத்தில் என்றும் — அமிழ்தமெனப்
போற்றிப் பயன்கொண்டு பொல்லாங்கு நீங்கிடவே
வீற்றிருக்க வேண்டும் விழைந்து.

# ஏற்றுரை

**பொறிஞர் இராச. வேதாந்தம்,**
தலைமைப் பொறியாளர்(ஓய்வு),
சென்னை.

வண்டாய் மதுவாழ வாய்த்ததென என்மடியில்
கண்டேன் தமிழ்ச்சேய் களிவெண்பா — உண்டதனால்
வெண்பா எழுத விழைந்தேன் விளையாட்டாய்
பண்டு தமிழ்ப்படித்த பண்பு.

அகப்பாக்கள் ஐந்நூ றமைத்தற் கெளிதோ
திகைப்பாய் இருக்குந் திகட்டா — இகத்தின்
முகட்டில் முடிசூடி முக்காலும் நின்று
பகட்டாய்ப் பயிற்றுமே பண்.

வெண்பாப் புகழேந்தி மீட்டும் ஒருநூலை
உண்பாய் எனப்படைத்தல் உண்டாமோ — பண்பாற்சீர்
தீந்தமிழில் செந்தமிழ்ச்சேய் தேனார் களிவெண்பா
ஈந்தினித்தார் ஐந்நூ றிவண்.

காதற் களிவெண்பா காட்டுங் கவினழகை
ஓத உணர்வுயிர்க்கும் ஊட்டமிகும் — ஏதம்
எதுவெனினும் ஏக எழுமின்பம் பூவின்
மதுவுண்ட வண்டானோம் மாந்து.

முள்ளிருந்தும் உள்ளருந்த முக்கனியின் மிக்கசுவை
கள்ளிருக்கும் கொள்ளக் களிமிகுக்கும் — உள்ளுருக்கும்
காதற் களிப்பாக்கள் கட்டறுத்தோர் நெஞ்சகத்தும்
மோதும் உணர்வை முகிழ்த்து.

## நன்றுபல செய்தார்க்கு நன்று

**புலவர்—பொறிஞர் சி. செந்தமிழ்ச்சேய்.**
*கடலூர்.*

செய்யாமற் செய்துதவுஞ் செல்வக் கணபதியார்
மெய்யாய் எனக்கமைந்த மேன்மையினர் — பொய்யாய்ப்
புகழ்ந்துரையார் பொன்வரினும் போயிடினும் நெஞ்சால்
இகழ்ந்துரையார் யாரையும் ஈண்டு.

கற்றுங் கவிபுனையக் கல்லார் கவிச்சித்தர்
சொற்றிறத்தைக் காணத் துடித்தெழுவர் — சொற்றொடரை
வெட்டி வரிசையிடு வேடர்க் கிவர்கவிதை
கொட்டுங் குளவியாம் கொள்.

வெண்பா இலக்கணத்தை வேதாந்தம் ஊட்டுவித்தார்
கண்டேன் களிவெண்பா களையொழித்தார் — பண்பாளர்
தண்டமிழ்ப்பா ஆக்குந் தகுதி எனக்கிங்குப்
பண்டவர் ஊட்டிய பண்பு.

நல்ல சுவைஞரிவர் நண்பர் சிவானந்தம்
சொல்லக் குறைகாணின் சோர்வுபடார் — ஒல்லும்
வகையால் உவந்துதவ வாய்த்தமனப் பாங்கால்
பகைமுன்னர் வேலாவார் பார்.

காதற் களிவெண்பா கையிற் தவழ்தற்குத்
தீதில் இளம்பரிதி தேர்ந்துழைத்தார் — ஏதமில்
இன்பப் பொருளியம் பிந்நூலை ஆக்கற்கு
நன்றுபல செய்தார்க்கு நன்று.

# படையல்

## அரசூர் இலட்சுமி நாராயணன் அவர்கட்கு

வேண்டு விடுதலைக்காய் வீட்டறத்தை விட்டிட்ட
ஆண்டகை ஈகையர் அன்புடையர் — தூண்டிடினும்
இன்னா இயற்றாதார் எங்கள் குலமூத்தோர்க்(கு)
இன்னூலைச் சேர்த்தேன் இசைத்து.

# பொதுப் பாயிரம்

**கவிச்சித்தர் க.பொ. இளம்வழுதி,**
*கடலூர்.*

களிவெண்பா தேரில்சொற் கற்பூர மேற்றி
வெளியுலகைச் சுற்றிவர விட்டார் — வளிகடந்த
வானுக்கும் மேல்மொழியை வைத்தெண்ணும் செந்தமிழ்ச்சேய்
தானும் உயர்ந்தார் தழைத்து.

வேலியிலாத் தோட்டத்தில் வெள்ளாடு மேய்தற்போல்
போலித் தமிழரிவண் போற்றலுற்றார் — தாலியிலாள்
இல்லத் தலைமையென இன்றான நூலுலகில்
நல்லபடைப் பீந்தார் நமக்கு.

நூலறிந்து பாப்புனையும் நுண்மாண் தமிழ்ப்புலவர்
வாலறிவு செந்தமிழ்ச்சேய் வண்டமிழ்ப்பா — காலறிவே
உள்ளாருங் கற்றிட்டால் ஊற்றெடுக்கும் பாட்டுணர்வு
துள்ளும் அறிவுநடைத் தூக்கு.

நெல்லிக் கனியுள் நிறைந்திட்ட ஊட்டம்போல்
சொல்லில் சுவையேற்றிச் செக்கவைத்தார் — மெல்லியள்பால்
கோடிநலன் துய்த்தாரும் கொண்டாட நெஞ்சிளகப்
பாடிக் கொடுத்த படைப்பு.

நாலடியார் யாப்பை நயந்து களிவெண்பா
நாலடியில்நுட்பம் நமக்களித்தார் — ஆலடியாய்
வெண்பா மரபிங்கே வீழாமற் காத்திட்ட
பண்பா லுயர்ந்தார் படி.

# தற்சிறப்புப் பாயிரம்

எட்டெட் டகவை எனினும் உளமிளமை
கட்டற்றுச் சிந்தை களித்தற் களவில்லை
தொட்டுப் பெறுவுணர்வும் தோய்ந்து சுவைமகிழ்வும்
கொட்டும் களிப்பா குளிர்த்து.

நல்ல உரைத்தற்கு நாலிரண்டின் மேலெதற்குச்
சொல்லிற் சுவையூட்டிச் சூடேற்றும் பாடலிவை
ஆடித் தளர்ந்தாரும் பாடிக் கிளர்வடையின்
கூடுங் குறிகொண்ட கோள்.

இல்லை அருகெனினும் எண்ண எழுச்சியளி
வல்லைக் ஓடிமடவா வாய்ப்பின் வரம்பில்லை
எந்த அகவையிலும் ஈடில் அழகுடையார்
சொந்தம் உயிர்க்குச் சுவை.

கட்டில் தளர்வெனினுங் கட்டில் இருப்பார்க்குக்
கட்டில் பெருமகிழ்வைக் கட்டில் தருந்துணைவர்
வட்டில் அமுதளித்து வாழ்க்கை வளஞ்சேர்ப்பர்
மட்டில் பெருமையில் மாற்று.

மின்னல் ஒளிக்கீற்றை மின்மினியோ மண்காட்டும்
கன்னற் கழிச்சுவையைக் கால்நாணற் காட்டிடுமோ
உன்ன உணர்வூட் டுருவெழிலார் நன்னலத்தை
என்னுரைத்தும் இல்லையிவண் ஈடு.

வெண்பாவால் இன்பாலை வேண்டணி செய்தற்குப்
பெண்ணார் எழில்நலத்தைப் பேசலுற்றேன் என்பதலால்
ஈடாய் அமைபவைவோ ஏந்திழையர்க் கெப்பொருளும்
கூடா புலவனுரை கூடு.

அயகிற் கழகூட்ட ஆகா எனினும்
நுழைய அருவருப்பு நூலாக்கேன் நுண்ணுணர்வோர்
நன்னலத்தைப் போற்றி நலஞ்சேர்த்தல் என்பதலால்
துன்னலில் தூயோர்க்குத் தொய்வு.

# 1. நீராடெழிலி நிலவு

வைய முறங்குமின் வைகறைப் போததனில்
பைய நடந்த பருவத் தொருமகள்
ஆடை நெகிழ அனைத்துயிரு நாணமுற
நீடு புனல்மூழ்கி நீந்தித் திளைத்துக்
கயமா டழகைக் கரந்தொருவன் கண்டு
மயலோ டுலைவான் மலைத்து.

நலந்தரு ஞாயிறு ஞாலம் மகிழப்
புலர்ந்தது வைகறைப் பொழுது.

ஊரார் உறங்க ஒருங்கிணைந்து புள்ளிசைப்ப
நீராவி ஆடி நிறைத்ததென வைகறையாள்
தண்ணென் பனிபடரத் தாமரை மொட்டலையக்
கண்கள் மலர்ந்தனளே காண். 1

காலை மலர்தற்குக் காரணமாம் செங்கதிரோன்
வேலை குளித்தெழுந்து மேவானோ என்றிளைத்து
மொட்டனைத்தும் தம்முள் முணுமுணுத்துக் கீழ்த்திசையை
எட்டியெட்டிப் பார்ப்பனவே என்! 2

விண்ணுலவு வெண்மேகம் மண்ணில் விளையாட
எண்ணியதோ என்ன இடம்நிரப்பத் திண்பனியும்
நன்னிலத்து வீழ்துளியை நண்ணிக் கயலினங்கள்
மின்மினியாய் மின்னினவே மேல். 3

குடமிரண்டு மேலாடக் கொஞ்சுமிடை வாடத்
தடமடையும் வஞ்சித் தளிர் .

பந்தி உணவிற்குப் பாடாய்ப் பறப்பரெனெ
முந்தி அளிக்கூட்டம் மொய்த்தலைந்து தேடுகையில்
தேனிறைந்த நாண்மலராய்த் தேடற் கருவமுதாய்த்
தானணைந்தாள் தண்ணீர்த் தடம். 4

தன்னந் தனியளெனத் தன்னினைப்பில் தாழ்குழலாள்
உன்னற் கரியவெழில் உண்மறைநற் சேலை
குளிக்கக் கரைகலைந்து கொண்டாள்சிற் றாடை
களிக்கக் கரந்தோனுங் கண்டு. 5

முல்லை மலர்ச்சிரிப்போ முன்னொளிரும் பல்லுக்குச்
சில்லென்ற தென்றலுமோ செம்மேனித் தண்மைக்கு
வெல்லற் குரியவையோ வேலம்பும் சேல்விழிக்குச்
சொல்லற் கிணையுண்டோ சொல். 6

**காரூடு தண்ணிலவும் காண்டற் கியைந்திடுமோ**
**நீராடு பெண்ணாள் நிலை.**

சோலை மலர்ப்பூக்கள் சூழ்ந்த நறுங்குளத்தில்
வாலைக் குமரியவள் வாணுதலாள் மெய்தவழ்ந்த
சேலை நிலைதிருத்திச் சேலெனவே நீந்துமெழில்
கோலம் உயிரிறுக்குங் கூற்று. 7

பாலாவி மேலாடை பாய்ந்துநீ ராடுகையால்
நூலாக ஊடே நுணல்நோக்க — மேலாம்
அரசிலைப் பின்னமைவாய் அல்குற்ற டம்பம்ப
அரவென் றலரு மதிர்ந்து. 8

கயமலர் ஒண்கண்ணாள் காண்டற் கினிய
குயமறைவெள் ளாடை குலையநீ ராட
இயலிழந்து நின்ற இசைவண்டும் கெண்டைக்
கயலினமும் காணக் களித்து. 9

கச்சமை கொங்கையன்று கட்டிலா தோங்கியெழ
நச்சிடு தாமரை நாட்பூப் பொதியென
மெச்சிமிகக் கண்டுவந்து மேவிய வண்டினங்கள்
அச்சத்தால் நின்ற அதிர்ந்து. 10

செண்டெனக் கூம்பிச் செழித்தநறு மொக்கிடத்
துண்டிடத்தேன் தேடி உறுபவை எங்குமில்லை
வண்டினு மீகரிய வண்டிவை வந்தவாறு
கண்டதுமில் என்ற கணித்து. 11

வண்டுகள் வாட்டமுறு மைவண்ணப் பொட்டுடைய
கொண்டற் குழலுடையாள் கொங்கைக் கொழுமுனைகள்
விண்டுரைக்க நேரின்றி விண்ணோக்கிச் சீறிட்டுத்
தண்டித்த நெஞ்சைத் தடித்து. 12

கற்பவை கற்றிடக் காணாக் கசடென
இற்றிருள் ஞாயி றெழமெலப் பொற்றிரு
நேரில் நிலவெதிர் நேர்ந்தென ஆம்பலும்
தேரிச் சிரித்த திளைத்து. 13

விண்ணுலவு வெண்ணிலவு வீசுகின்ற தண்ணொளிக்குக்
கண்டிறக்கும் அல்லிமலர் காலைச் சிறுபொழுதில்
மண்ணிலொரு தண்ணிலவு பெண்ணுருவில் முன்னருகில்
கண்டுமகிழ் கொண்டனவே காண். 14

(கண்டிறக்கும் — கண் + திறக்கும்)

மாவடு மானுமம் மாந்தளிர் மேனியினாள்
தாவிநீந் தாறுகண்டான் தாவில்சீர் செந்தமிழ்க்
காவியங் கற்பார் களித்திடு நீர்மையனாய்
ஓவியம் ஆனா னுவந்து. 15

முத்தெடுக்க மூழ்கியெழு முச்சுடரில் தண்ணிலவோ
தத்தித் தவழுமெழில் தண்டமிழின் தாலாட்டோ
வைத்த அடிநோக வாடு மலரிதழோ
தித்திக்க வைத்தாளத் தேன். 16

(முச்சடர் — ஞாயிறு, திங்கள், தீ.)

**ஒளித்தழ குண்டோன் உணர்வுலைந்து வாடக்**
**குளித்து முடித்த கொழுந்து.**

கீழைக் கடலெழுந்து மேலொளிர் பொற்சுடராய்
வாழைத் தொடைஎழிலி வந்தாள் கரையேறி
ஈர உடைகாட் டெழிலில் உயிரனைத்தும்
ஓரறிவாய் நின்ற உறைந்து. 17

நீல நிறத்ததோர் நீளாடை கையெடுத்துச்
சேலனையாள் மேலொட்டுச் சிற்றாடை மாற்றுதற்கு
வேலம்பை நாற்புறமும் வீசி நடந்தாளே
கோலம் மறைத்துயிர் கொண்டு. 18.

சோலைப் புதர்மறைவில் சேலை தனையுடுத்திக்
கோல இடையிடத்துக் கொண்டாள் குடநீரை
வேலை முகந்து வெளிப்போந்த விண்ணவனும்
வேலை மறந்தான் வியர்த்து. 19

கற்றைக் குழற்சுமையும் கன்னற் கனியிரண்டும்
ஒற்றைக் குடநீரும் ஒல்லிடையைத் தள்ளிவிட
இற்றிடுவேன் என்றிளைத் திங்குமங்குந் தள்ளாடப்
பற்றிடும் நெஞ்சுள் பரிவு. 20

தங்க நிறமார்பில் தங்கத்தால் சிற்றாரம்
தொங்கத் துணைசெய்யத் தோடிரண்டு மின்னிட்டுத்
தங்கித் தவழ்ந்திடினும் தண்ணீர்த் தளிருடலாள்
அங்க வழகே அழகு. 21

**முன்னஞ் சுவைத்துணரா மொய்குழலாள் மெய்யழகால்**
**தன்னை இழந்தான் தவித்து!**

காணற் கருவழகுக் காட்சியெலாங் கண்டுமனம்
பேணற் கியலாது பேதுற்று வாடிமிக
நாணற் குரியவெலாம் நாடி நலமிழந்தான்
கோண லறிவாற் குமைந்து. 22

காதளவு நீளுமியல் கண்ணழகாள் மெய்யெழிலால்
பேதலித்த நெஞ்சினனாய்ப் பேணானாய் ஐம்புலனை
ஏதினியு மேற்றதென எண்ணிமிக ஏக்குற்று
வேதனையால் நொந்திழிந்தான் வெந்து. 23

**கள்ள மனத்தினனாய்க் கன்னி எதிர்நின்றான்**
**உள்ள முணர்ந்தாள் உடன்.**

மெல்ல அசைந்தசைந்து மேனி எழிற்குலுங்கச்
செல்லுந் திறன்கண்டோ தேரும் மறைந்தொழிந்த
ஒல்லுஞ் செயலறியா உள்ள இளஞ்செழியன்
செல்லும் வழிமறித்தான் சென்று. 24

அள்ளி அவளழகை ஆடா தசையாது
குள்ள குணத்தினனாய்க் கொண்டோன் குறுகுறுத்த
உள்ளத் தடுமாற்றம் உண்விழிகள் தாம்காட்டக்
கள்ளந் தெளிந்தாள் கசந்து. 25

இளம்பரிதி காலை எழுமுன்னர் ஏகிக்
குளங்குறுகி நீந்து கொழுந்தன்னாள் தன்னைக்
களம்மறைந் தோரானுங் கண்டான் எனக்கண்
டுளம்நொந்தாள் உன்னி உளைந்து. 26

**கொள்ளக் குறைதலுண்டோ கோதிலார் நல்லழ**
**குள்ளப் பெருகு முணர்வு.**

அள்ளக் குறையா அவளழகு வானன்றோ
கள்ளர் கவரவரு கல்விக் கவினன்றோ
உள்ள உவப்பளிக்கும் ஒண்டமிழர் பாட்டன்றோ
எள்ளளவும் உண்டோ இழப்பு. 27

**தன்னை இழந்தானைத் தாழ்குழலாள் தாங்குவளோ**
**முன்னம் நினைத்தாள் முடிபு.**

ஒற்றை அடிப்பாதை ஓரம் ஒதுங்கலின்றிக்
கற்றைக் கருங்குழல் காற்றில் அசையுமெழில்
முற்றத் தனையாள மூழ்கியவன் மீட்சியுறச்
சற்றே கனைத்தாள் சளைத்து. 28

**விழுந்தது நீர்மை விளைந்தது வேட்கை**
**எழுந்த தழகா விடர்.**

கோதறுசீர் கோலக் குளிருடலாள் கொஞ்சுமெழில்
ஏதமிக நெஞ்செய்தி எற்றி இடர்விளைக்க
வேதனைக் காட்பட்டு வெந்து பொடிந்திடுவான்
மாதவளைப் பார்த்தான் மறித்து. 29

பார்த்தவிரு கண்ணும் பதித்த அவளுருவை
நீர்த்த குணங்கள் நெகிழ்ந்தது நெஞ்சுறுதி
ஆர்த்தது வேட்கை அசைந்தன கால்கைகள்
வேர்த்தான் உடலம் விதிர்த்து. 30

விழுப்பமீய் நல்லொழுக்கம் வீழில்வே ரில்நோய்ப்
புழுக்கள் உயிருறிஞ்சும் புன்மையதாய் வாழ்வும்
பழுக்கும் பசையிறும் பற்றின்றிப் பாழாம்
இழுக்கெய்து மெல்லா மிழந்து. 31

**இன்னலுளங் கொண்டோன் எதிரிருந் தேகற்குக்**
**கன்னி வழிகண்டாள் காண்.**

தீயிற் சுடுகாமத் தீமை தடுத்தலிலா
நோயிற் துடிப்பானின் நோய்க்கு மருந்தனைய
வேயிற் றிறட்டோளள் வேண்டா விலக்கற்கு
வாயிற் குலைந்தாள் வரிந்து. 32

நேரவுள தீமைகளை நெஞ்சுள் நினைந்தோர்ந்து
வாரிருங் கூந்தலாள் வாடாவா என்றழைத்தாள்
யாரவராம் நோக்கிடவும் ஏவு கணையொப்பத்
தேரிரண்டாள் சென்றாள் தெளிந்து. 33

வெட்ட வளர்நகம்போல் வேரிறா முட்செடிபோல்
கட்டுள் அடங்கலிலாக் காம உணர்வலைகள்
முட்டி முழக்கி முறுக்க முகஞ்சோர்ந்தான்
மட்டறியாத் தன்னுள் மலைத்து. 34

# 2. காதல்நோய் தந்த கசப்பு

நெஞ்சம் நிறைந்திட்ட நேரில் எழிலியினால்
துஞ்ச மறந்து துடித்த இளஞ்செழியன்
கண்டு மலைத்தானாய்க் கண்ணன் எனும்நண்பன்
பண்டு நடந்த பயனில் செயலனைத்தும்
எண்ணிச் செழியற் கியன்ற எடுத்துரைத்தான்
பண்ணற் குரிய பகுத்து.

**சோர்ந்த முகத்தினனைப் பார்த்த உயிர்த்தோழன்**
**நேர்ந்த நினைப்பான் நெடிது.**

உறக்கமிலை என்றுரைத் தூரெழா முன்னர்ச்
சிறக்கும் எழிற்காலைச் செவ்விதனைக் காண
விரும்பித் தனித்து விரைந்தோனைக் கண்ணன்
திரும்பிடக் கண்டான் திகைத்து. 35

கண்ட உயிர்த்தோழன் கண்ணன் மிகவெளியன்
தொண்டு மனமுடையன் சொந்தத் தொடர்பினன்தா
என்ன நடந்ததென எண்ணி அறியானாய்
முன்னம் நுனித்தான் முகம். 36

நகுதற்கோ நட்புறவு நன்றாமோ நண்பன்
அகமிக வாடியதும் ஆய்வோ மகற்றவெனப்
பண்புடை யாளன் பழகு தமிழன்னான்
கண்ணன் விளித்தான் கனிந்து. 37

**இத்துன்ப மிங்கின் றெழுந்ததுவு மெவ்வாறோ**
**அத்தனையுஞ் சொல்க அகழ்ந்து.**

கல்லார் மனத்திரையைக் கவ்வுங் கசடொப்ப
ஒவ்வா றுறவால் உறமருட் சேர்ந்ததெனப்
பற்றிப் படரவிருட் பால்வடியு முன்முகத்தைத்
தொற்ற லெதற்காந் துயர். 38

இன்னல் பலவுழந் திற்றிட்ட நெஞ்சினனாய்க்
கன்னல் விளைகழனி கானோங்கு சிற்றூர்
அடைய வடைந்தாய் அருவமைதி ஆயின்
இடையிங் கெழுந்ததுவு மென். 39

அழிவின் நவைநீக்கி ஆறுய்ந்தஃ தெய்தின்
இழக்கப் பலவடுத்து மேற்கு மகத்திட்பம்
கொண்டோன் உயராகக் கொள்வாய் எனையென்றால்
விண்டோது பட்ட வினை. *40*

**கண்ட துயர்க்காம் கரணியத்தை நற்செழியன்
விண்டுரைப்பான் மெல்ல விரித்து.**

மழைமேகங் கண்ட மயிலகவும் ஆடும்
மழமானும் சேர்பிணையால் மாணும் மகிழ்ந்தோடும்
இல்லானுங் கொள்பொருளா லின்புறுவா னிங்கெனக்கோ
எல்லாந் தலைகீழ் எதிர். *41*

ஆரணங்கோ மானோ அழகு மலரவளோ
ஈரவுடை மீனோ எழுநிலவோ விண்மீனோ
மாங்குயலோ வண்ண மணிப்புறவோ மாதவளோ
ஏங்குமே என்னெஞ்ச மென். *42*

அணங்கோ இமைப்பாள் அணிமலரோ வாடாள்
உணங்காள் பறவாள் உறுவாள் இராப்பகலும்
மானோ இருகாலள் மாங்குயிலோ வீடுடையாள்
யானோர்ந்தேன் மாதிவளே யாம். *43*

தாமரை நாண்மலரே தண்ணிலவின் வெண்ணொளியே
பூமலை பொற்றேரே பொற்புடை நற்றிருவே
நித்திலமே மின்மணியே நேரி லெழிலுருவே
பித்தனென வானேன் பிறழ்ந்து. *44*

மூடு பனியாடை மொய்குழலாள் மூழ்கிநீர்
ஆடு மெழிற்கோல மாரெடுத்துக் கூறிடுவார்
காற்று மெழுதலின்றிக் கண்டதக் காட்சியெனில்
ஆற்று மளவினனோ ஆங்கு. *45*

பட்டுத் தளிர்மேனி பட்டுத் திளைத்தநீர்
கட்டுக் குலையாக் கனியுடல வெம்மையினைத்
தாங்குந் திறனற்றுத் தாவியெழும் மஞ்சாகும்
ஓங்கு முடற்சூ டுலர்ந்து. *46*

காலை இருள்வானில் காட்சியளி வெள்ளியவள்
சோலை மலரனைத்துஞ் சோர்ந்த அவட்சார
மாங்குயிலும் வண்டும் மறந்த இசைபாட
ஏங்குவவே யாவு மிளைத்து. *47*

யாரென் றெனைக்கேட்பின் என்றுமினி தீந்தமிழ்தான்
பாரி லவளொப்பார் பார்த்ததில்லை என்வரையில்
கோதில் கனியிரண்டு கோறி உயிர்பறிப்ப
தீதில் தெறலுடையள் தேன். *48*

(தெறல் = வெம்மை)

ஈரீரண்டு திங்கள்யான் இவ்வூரில் வாழ்ந்திருந்தும்
காரிறங்கு மேனியளைக் கண்டதில்லை நேற்றுவரை
அல்லி மலர்களிடை ஆடியசை தாமரையே
சொல்லில் எடுத்துரைக்கச் சூழ்த்து. 49

சங்குக் கழுத்ததனில் தங்கத்தால் சிற்றாரம்
தொங்கத் துளங்கழகுத் தோடுண்டு காதுகளில்
வெண்ணிலவே அன்னவற்றான் வேண்டா அடையாளம்
கண்ணுட் கலந்துறைவாள் காண். 50

உள்ளூரோ வேற்றூரோ ஒன்று மறியன்யான்
கள்ளூறும் வெள்ளைமலர் கற்பனைக்கு மெட்டாதாள்
ஒற்றைத் தனிமரமோ உள்ளற் குரியவளோ
முற்று முரைக்க முயல். 51

**இசைத்ததையே மீண்டிசைக்குங் கீறலிசைத் தட்டாய்**
**இசைப்பார்க் கெதிருரைத்த லேது.**

அரைத்த பொடிமீட் டரைக்குமள வில்லோன்
உரைத்த மொழிகேட் டுளங்கெட் டுலைந்தோன்
விளைத்த கனிச்சாற்றில் வீழ்ந்தஈ ஒப்பக்
களித்தானைக் கண்டான் கசிந்து. 52

திருந்தி அறநெறியைத் தேர்ந்தமைந்த நண்பன்
வருந்தப் பழம்வழக்கம் வந்தெய்தப் பெற்றனனோ
என்றாய்ந்து தேர்ந்தான் எதிரிருப்போன் நல்லனென
நன்றாற்றக் கண்ணன் நயந்து. 53

# 3. நிலவை மறைத்த நிழல்

ஆடைக் குலையநீர் ஆடழகை ஆங்கொருவன்
கோடு மறைவிருந்து கொண்டான் அதற்காக
நீடு நினைந்துருகி நீர்கண் நிறைத்தரும்ப
வாடி வதங்கிடலோ வாழ்வு.

**கொண்டவனுங் காணற்குக் கூடாக் குயவழகைக்**
**கண்டனனே வேற்றோன் கரந்து.**

கொண்டல் முழுநிலவைக் கூடிற் றெனத்தோன்றக்
கொண்ட மனத்துயரம் கூறிட் டுயிரறுக்கும்
கொண்ட ஒருவனன்றிக் கொள்ளற் கருவழகை
உண்டனனே தீய னொளிந்து. 54

காலை அரும்பாக் கருக்கிருட் காலையிலே
சேலை இடைமாற்றிச் சேலெனவே நீந்தக்
கரந்தொருவ னக்கோலங் கண்டினித்த கண்டாள்
உரங்குலைந்தாள் நெஞ்சம் உழந்து. 55

முல்லை முகையன்ன முன்னெழுந்த முண்முலைகள்
சொல்லாற் சொலவியலாத் துன்பச் சுழலுலைக்க
முந்நீர் அலைகளென முன்னெழுவ பின்தாழ்வ
இந்நீர்த்த நாளும் இரைத்து. 56

எந்நாளு மில்லா இழிநாளாய் இன்றெனக்(கு)
இந்நாளும் வந்திங் கியைத்ததுவே இன்னலெனோ
கன்னல் கனியுடலைக் காளையவன் கண்டதுமென்
கன்னி அழுதாள் கரைந்து. 57

என்ன நடந்ததென்றி யாரிடத்துத் தானுரைப்பாள்
உன்ன உடலுதறும் உள்ளந் தடுமாறும்
தின்னப் பசியிருந்தும் தேனுங் கசப்பளிக்கும்
என்செய்தற் கேலும் இனி. 58

தந்தைதாய் தாமறியின் தாளாத் துயர்படரும்
சொந்தம் அறியவரின் சொல்லம் புயிர்துளைக்கும்
அண்ணன் அறிந்திடினோ ஆர்த்துத் துடித்திடுவான்
எண்ணின் இடரே எழும். 59

மணமான அந்நாளே மாறுற்ற நால்வர்
பிணமாகக் கொன்ற பெருஞ்சினத்தன் அத்தைமகன்
இன்றிருந்து தானறியின் ஏற்றமிலாச் செய்தானைக்
கொன்றிருப்பான் அன்றோ குவித்து. 60

யாரோ புதியனவன் இல்லையெனில் யான்குளிக்க
வாரான்முன் வந்திடினும் பாரான் வழிமறியான்
தேறான் எதிர்நிகழ்வைத் தீய புரிந்திட்டான்
ஆறாள் நெடும்பொழு தாய்ந்து. 61

கொள்ளப் பெருகுமெழில் கோயிற் கலசத்தைக்
கள்ள விழிப்பார்வை கட்டுப் படுத்தலுண்டோ
கொண்டார் துயர்கொள்வர் கொள்பொருளுங் கொண்டிடுமோ
கொண்டாள் அமைதி குறித்து. 62

# 4. எழிலால் எழுந்த இடர்.

ஒன்றன் றிரண்டுதிங்கள் ஓடி ஒழிந்திட்டும்
அன்று குளநீரில் ஆடி உயிர்கொண்ட
கன்னி பெடமயிலைக் காணற் கியலானாய்
உன்னி உருக்குலைந்தும் ஒல்கா இளஞ்செழியன்
கண்ணன் உடனோர்ந்து காணற் குறுவழியை
எண்ணினென் ஏதுந்தீர் வில்.

**கூற்றாய் அவள்நினைப்பே கொல்ல இளஞ்செழியன்**
**ஆற்றா தயர்வான் அலைந்து.**

ஊட்டப் பயிரிடையே ஓங்கு களையொப்ப
ஆட்டங்கள் ஆடி அகன்ற இளஞ்செழியன்
பட்டுத் தெளிந்த வுளப்பாங்கு கேடுறவே
ஒட்டி உலைத்தாள் உயிர். 63

இன்று வருவள்கொல் நாளை வருவள்கொல்
என்று வருவள்கொல் என்றேங்கிச் சென்று
குனித்த தலையினனாய்க் கோணலுடற் கொக்காய்த்
தனித்தமர்ந்து நொந்தான் தளர்ந்து. 64

இன்றேனும் வாராளோ என்றெண்ணிச் சென்றிருந்த
குன்றேய் இடர்முன் குவிந்தாலுங் கோணாத
உள்ளம் உடையான் உவமையிலா ஒண்ணுதற்(கு)
உள்ளம் உழந்தான் உடைந்து. 65

எண்ணி இருதிங்கள் இன்றோடு சென்றிருந்தும்
பெண்ணிற் கரசியினைப் பேசும்பொற் சித்திரத்தைக்
கண்ணின் கருவிழியைக் காணா திருப்பதுமென்
எண்ணி அடைந்தான் இழிபு. 66

மட்டில் புலனைந்தும் பட்டறிந்து பாங்குடனே
கட்டுள் அமையவறங் காட்டுநெறி நின்றவனை
வெள்ளப் பெருக்கிடையில் வீழ்சருகாய் அல்லலுறத்
தள்ளிச் சிரித்தாள் தளிர். 67

**மூண்டெரிக்கும் பெண்ணினைவால் முன்னிருந்த கண்ணனிடம்**
**வேண்டுவான் தன்னிலையில் வீழ்ந்து.**

ஒற்றை மரந்தன்னில் ஒட்டி உறைசெழியன்
சுற்றி விழிசெலுத்த சூழ்ந்த அருநண்பன்
கண்ணனைக் கண்டுதான் காரிகையால் தீதுற்ற
உண்மையினைச் சொல்வான் உழன்று. 68

நாராய் மெலிந்தும்நான் நண்ப உடன்சூழ்ந்து
தேராய் ஒருவழியைச் செய்தவறும் ஏதுமுண்டோ
தேடற் கரியவளைத் தேனமுதை நாண்மலரைக்
கூடற் குரியவற்றைக் கூறு. 69

உள்ளத்தைக் கள்ளம் உடனுறைந்து கொல்வதுபோல்
கள்ளி அவளிருந்து காவு கொடுக்கின்றாள்
இல்லா பலவெண்ணி இன்னலுறும் நான்தேறச்
சொல்லாயோ நன்றாய சொல். 70

**அவளே அனைத்துமென அல்லலுறு வாற்குக்**
**கவலேல் எனும்பலவுங் கண்டு.**

விழிவழி நீரூற்றை வென்றடக்க மாட்டாச்
செழியனுரை கேட்டுச் செவிகைப்ப உள்வாடிக்
கண்ணன் உயிர்த்தோழன் கற்றறிந்த செய்திகளை
எண்ணி உரைப்பான் இனிது. 71

தேடற் கரியளெனத் தேர்ந்தே உரைப்பையெனில்
தேடின் விளைவதென்ன தேனமுதோ இவ்வூரில்
ஓடி உழைத்திடுவோர் உட்கொள்ளுங் கூழ்ச்சோறே
நாட அறிவாய் நலம். 72

கவலை உறுவதனால் காண்பயன்தான் என்னுண்(டு)
அவலை நினைத்துரலை ஆரே இடித்துழல்வார்
பார்த்துப் பழகலிலாப் பாவையினை எண்ணியெண்ணி
நீர்த்துப் புலம்பலென் நின்று. 73

எச்சில் இலைச்சோறும் இன்னமுதாய் இல்லோர்க்காம்
குச்சில் வறியோர்க்குக் கூரையும் மாளிகையாம்
கச்சில் அடங்கலிலாக் காய்த்தெங்குக் கன்னியென
மெச்சல் அழகன்று மீள். 74

பெண்ணெவரைக் கண்டிடினும் பேதலிக்குங் கள்ளமுன்பு
கொண்டிருந்தாய் இன்றில்லை குற்றமெதும் நான்காணேன்
நீவிரும்பு பெண்ணரும்பு நேரில்லார் உன்னினைப்பில்
காவியம் ஆனார் கலந்து. 75

கள்ளமிலா உன்னில் கலந்தார் அடையாளம்
உள்ளார் பலரிவ்வூர் உள்ளார் அவரிடையே
உன்னவரைத் தேடல் உயரணிக் கோர்வையிலே
இன்முத்தைத் தேடல் இனைத்து. 76

சிற்றூர் வயல்களிடை சேர்ந்து செயலாற்றக்
கற்றேர் மகளிரும் காட்டார் தயக்கமெனில்
கட்டுக் குலைதலிலாக் கட்டழகுப் பெட்டகங்கள்
மட்டின்றி உண்டாம் மதி. 77

உழைப்பே உயர்வென் றொருபொழுதும் ஓயார்
இழைக்காப் பொலன்மார்பர் ஏற்றுதமிழ்க் காவியமாம்
இன்னமுதாம் நன்மருந்தாம் இவ்வூர் எழிலாருள்
உன்னவளைக் காணலென் உன். 78

கற்பனைக்கும் எட்டாத கட்டழகுப் பெட்டகமே
பொற்சிலையே பூமலரே போற்றுமெழிற் சித்திரமே
அள்ளி அவளழகை ஆசையில் ஏற்றிடுவார்
உள்ளத் தளவே உயர்வு. 79

ஒப்பார் அழகில் உடனுறைவார் ஆயிரம்
இப்பார் அலைந்தும் இவளனையார் இல்லையென்னல்
அன்பர் இயல்பாகும் ஆயின் தவறில்லை
அன்பின் பெருக்கம் அது. 80

பார்த்த ஒருமுறையே பார்த்தாயில் பின்னின்றும்
சீர்த்த எழிலுருவாள் சேர்த்தாள் துயருனக்கே
ஊரெதுவோ பேரெதுவோ ஒன்றும் அறிந்தோமில்
யாரந்தப் பேரழகோ இங்கு. 81

**யாரவள் எந்தவூர் ஏற்றவளா என்பதெல்லாம்**
**தீர வழியுரைப்பான் தேர்ந்து.**

ஒன்று வழியுண் டொதுக்கிடுக சோர்வனைத்தும்
இன்றிருந் தேழாம்நாள் இவ்வூர்த் திருவிழவாம்
எல்லாருஞ் சேர்ந்திடுவார் ஈரேழ்நாள் கோவிற்கு
நில்லாருன் னாளும் நினை. 82

இவ்வூர் மக்களலால் எட்டியுள ஊராரும்
செவ்வேள் விழாவிற்குச் சேர்ந்தடைவர் மாற்றமின்றி
எவ்வூர் எனினும் எழுந்திடுவார் உன்னகத்தார்
நைவேன் பெறுவாய் நலன். 83

# 5. பிறந்தது பெண்மணப் பேச்சு

அத்தை மகளல்லி ஐயன் துணைசேர
ஒத்த கருத்தினராய் ஒன்றி உரைசூழ
வேண்டா எனமறுத்தான் மெல்லெழிலி முன்பிறந்தோன்
தூண்டா மணிவிளக்கு தூயவல்லி கண்ணிரண்டு
ஊற்றுப் மணற்குழி ஊறுநீர்ப் போற்சுரக்க
ஆற்றுவார் மாமன் அறிந்து.

**அரத்தத் தொடர்பென்றும் ஆண்டிருக்க ஆசை**
**உருத்த விழைந்தார் உறவு.**

அத்தை உடன்மாமன் அல்லி அனைவரங்(கு)
ஒத்திருந் துண்டதன்மேல் ஊர்ச்செய்தி மேய்ந்துபின்
நல்லோர் குறித்தபொருள் நற்பொழுதில் பேசிடவும்
எல்லாம் அறிந்தாள் எழில். 84

அல்லிக் ககவையின் றாயிற் றிருபஃதும்
சொல்லி முடிவதில்லை சுற்றத்தார் கேள்விகட்கு
மன்றல் முடித்திடனும் மார்கழி போனவுடன்
நன்று நடத்தல் நலம். 85

பெற்றோம் ஒருபிள்ளை பேணி வளர்த்திருந்தோம்
உற்றான் இறுதியினை ஒல்காப் பெருஞ்சினத்தால்
கண்ட துயர்கழியக் காலம் பலவாகும்
உண்டோ அவனால் உயர்வு. 86

கொள்ளை கொடுத்திடத்தான் பிள்ளை பிறந்தனனோ
பிள்ளை பிரிந்ததுயர் பெண்ணால் குறைந்துவரும்
தாய்மாமன் மகற்கவளைத் தந்து மணமுடிக்க
வாய்த்திடனும் இவ்வாண்டு வந்து. 87

அல்லி அவற்கென் றவள்பிறந்த அன்றைக்கே
சொல்லி மகிழ்வுற்றோம் சொற்படி ஆற்றிடுவோம்
தையில் ஒருநாளில் தையலை ஐயனவன்
கையிற்கை சேர்ப்போம் களித்து. 88

**அல்லி மணங்குறித் தத்தை எடுத்துரைத்துஞ்**
**சொல்லில் நிறைந்தது நோர்வு.**

அத்தை உரைத்தமொழி அத்தனையுங் கேட்டிருந்தும்
எத்திறத்தும் பேசா திருந்த எழில்வீட்டார்
உள்ள நிகழ்வுகளை உற்றுணரா மாமனத்தை
கொள்ளவில்லை உண்மை குறித்து. 89

எங்கள் மரபிற் கிவளின்றி யாருமில்லை
தங்கும் இவட்கன்றோ சார்ந்த திருவனைத்தும்
ஒன்றுக்குள் ஒன்றென்றே ஒத்து நமக்குள்ளே
மன்றல் முடித்தல் மரபு. 90

ஐயன் அவட்கென் றாரே அறியாதார்
வையம் அறிந்ததனால் வாரார் மகள்கோரார்
இன்னும்நாம் வாளா இருத்தல் இயல்பன்று
முன்னமிங் கேற்போம் முடிபு. 91

சொல்வீர் எதுவுமிவண் சோர்வாய் இருப்பதென்ன
இல்லா எதையேனும் இங்கெடுத்துச் சொன்னோமா
அல்லியும் சொத்தனைத்தும் ஆகும் மருகனுக்கே
சொல்லிடுக நன்றாய சொல். 92

**அல்லி துணையெனக் காகா தெனவையன்**
**சொல்லி அளித்தான் துயர்.**

மாமன் உரைமுற்றும் மற்றவர்போல் கேட்டிருந்த
தூமனத்தன் அல்லியெழிற் றோளுக் கணையானான்
ஐயனவன் தன்னகத்தை ஆங்கே அனைவர்க்கும்
பைய உரைப்பான் பணிந்து. 93

அழகிற் கழகூட் டழகே அழகாய்
மழலை மொழிப்பேச மாறா மகிழ்வுற்(று)
எழிலி எனவழைத்தோம் இன்றவ் வெழிலோ
விழலுக் கிறைத்தநீர் வீண். 94

வாடா மலர்ச்சிரிப்பு வாய்த்த எழிற்முகத்தர்
ஓடாய் உலர்ந்த மலர்ச்சருகாய் ஒற்றைத்
தனிமரமாய் இன்று தளர்ந்துலைந்து வாட
இனிப்பதுவோ வாழ்வும் எமக்கு. 95

இருக்கின்றாள் அல்லி எனக்கென்ற நெஞ்சச்
செருக்கில் தலையுயர்த்திச் செம்மாந் திருந்த
பெருமையெலாம் பட்டதன்றோ பேதுற்றென் தங்கை
அருமை பிழையுற்ற அன்று. 96

மலர்ந்து மணந்து மகிழ்வளித்த எங்கள்
குலக்கொடியை உங்கள் குலத்தின் எரிகொம்பில்
தேடிநாம் சேர்த்த செழுமையிலாச் செய்கையினால்
வாடி இழந்ததே வாழ்வு. 97

வளியடித்து மண்சாய்ந்த வாழையெனத் தங்கை
ஒளியிழந் தல்லலுற ஒப்பேன் மணத்திற்குத்
தப்பில்லை அல்லிக்குத் தக்க ஒருபிள்ளை
ஒப்பின் உடன்பார்ப்பீர் ஓர்ந்து. 98

**வேண்டேன் மணமென்று வேண்டியவன் கூறியதால்**
**மாண்டாள் அனையளாம் மாது.**

தாய்மாமன் பிள்ளை தனக்கென் றிருந்தானின்
வாய்ச்சொல்லைக் கேட்டிழிந்த வஞ்சி இளவல்லி
வேர்த்தாள் விறுவிறுத்தாள் வெஞ்சினத்தால் யாவரையும்
தீர்த்தாள் எரிவிழியால் தீய்த்து. 99

ஆடாமல் ஆடி அடிமனத்தில் அமைந்தவனைக்
கூடாமல் கூடிக் கொழுகொம்பாய்க் கொண்டவனை
நாடாமல் நாடி நலமளித்த நற்றமிழை
வாடாளோ நீங்க வரின். 100

வாட்டுமனற் காற்றில் வழியிழந்த மடமானோ
காட்டுத்தீ சேரக் கருகுமிளம் பூங்கொடியோ
நீரிறந்த சேலோ நிறையிழந்த விண்ணிலவோ
யாருரைப்பார் அல்லியிரு ஆறு. 101

எள்விழினும் கேட்குமொலி என்றியைந்த பேரமைதி
கள்வழியும் தேனிதழாள் கண்வழியும் நீரருவி
கண்டுமனம் அண்டுதுயர் கொண்டுவலி மண்டுநனி
விண்டுவெளி தண்டுமொழி வீண். 102

**நீர்வார் விழியினளை நீயே மருகியெனத்**
**தேர்ந்தாள் நிலைமை தெளிந்து.**
தாய்மாமன் அல்லி தலைதடவி அன்பமைய
வாய்ப்பாய் மருமகளாய் வாட்டமென் நீமலர்க
உன்னையன்றி இன்னொருத்தி உண்ணுழையாள் என்றுரைக்கக்
கன்னி அமைந்தாள் களித்து. 103

# 6. தேடக் கிடைத்த திருவிழா.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
கொண்டுநாம் காணற்குக் கூடலிலா ஒருருவை
ஆண்டான் எனவுரைத் தாறறிவைச் சூறையிட்டுத்
தீண்டார் இவரென்று தேர்ந்து பிரித்தாளும்
மெய்யுழைப் பென்றுமிலா மேன்மையிலாப் புன்மையரின்
பொய்யுரைக் கேற்பப் புனைந்த விழாத்திரளில்
ஆடிக் குளித்துயிர் ஆனாளைத் தேடிடுவான்
நாடி இளஞ்செழியன் நைந்து.

**எல்லாருங் கூடி எடுத்த திருவிழவில்**
**செல்லாதார் இல்லை சினந்து.**

நீர்முகண்டுமேகம் நெகிழ்ந்து பொழியாமல்
சீர்கொண்டு பார்காணச் சேர்ந்த தெனமொழிய
மேலிருந்து நோக்க மிகுந்த கருமுடிகள்
காலசைத்துச் சென்றனவே காண். 104

எங்கும் இலைகள்ளம் எல்லாம் மகிழ்வெள்ளம்
தங்கும் இதழ்ச்சிரிப்பு தாவும் விழிவிரிப்பு
கன்னற் சுவைபேச்சு காதலர் தம்கண்வீச்(சு)
இன்னல் எனவெதுவும் இல். 105

வானகத்து விண்மீன்கள் வையகத்து வந்தனவோ
ஞானமிகக் கொண்டோரும் நாடி நலிவுற்றார்
பட்டுத்து மின்னிப் பளபளக்கச் சிற்றிடைய
கட்டுடலார் சேர்ந்தகவின் கண்டு. 106

கோடைக் குளிரிரவில் குற்றமிலா வெண்ணிலவில்
ஓடைக் கயலொப்ப ஒள்ளிடையர் மின்னலிடக்
கண்டார் இளைஞருடன் கற்றமைந்த பெற்றியரும்
கொண்டார் கனவுங் குறித்து. 107

நீர்க்குள் நெளிந்தசையும் நீராம்பல் பூவனையர்
பார்க்குமிடந் தோறும் படர்ந்து மணம்பரப்ப
வேர்க்க விழிநோக மெய்விதிர்த்து நின்றிருந்தார்
ஆர்க்க இளைஞர் அகம். 108

எந்த அகவையினர் என்றங்குப் பேதமின்றிச்
சொந்தம் புடைதொடரச் சூழ்ந்து மகிழ்ந்திருந்தார்
வந்த இனத்தார்க்கு வாழ்வளித்துத் தாழ்வடைந்து
நொந்துந் திருந்தாரை நோக்கு. 109

**பொல்லார் மறைமொழியின் புன்மை உணராதார்**
**கல்லாரே கற்றிருந்தும் கல்.**

நாமறிந்த நற்றமிழால் நாதன்தாள் ஏற்றாமல்
ஊமனென ஏதேதோ ஓதி உலறுகின்றார்
இல்லார்க் கொருகாசும் ஈயாரும் இன்னவர்க்கு
நல்கிடுவார் செல்வம் நயந்து. 110

நன்றெது தீதெது நன்கறிவார் அன்றிருந்தார்
இன்றுபல கற்றிருந்தும் ஏற்கார் பகுத்தறிவை
ஏய்த்துப் பிழைக்கவென வாய்த்த இறைப்பெயரால்
சாய்த்திட்டார் நம்மவர் சால்பு. 111

உள்ளம் ஒருகோவில் உற்றுணர்ந்தார் யாருள்ளார்
கள்ளம் புகுந்ததனால் கல்லைக் கடவுளென்றார்
உன்னில் கடவுளில்லை உட்கடந் துற்றுணரின்
உன்னில் அனைத்தும் உணர். 112

போற்றுமியல் மின்திறனும் போக்கு வரத்திணைப்பும்
தோற்றமிலா முன்னாளில் தோன்றிய கோயிலெலாம்
ஆய கலைகள் அரங்கேற ஆய்வுபெற
ஈய அமைந்த இடம். 113

கூடிக் கலைபலவும் கொண்டவிடம் கோயிலன்றோ
கூடற் கலையுணர்த்துங் கோயிற் சிலைகளலோ
தேவர் அடியாரும் தேர்ந்த பயிற்றுநராய்
ஆவ துரைத்தரன்றோ அன்று. 114

கலைகண்டு மக்கள் களித்திருந்த அந்நாள்
நிலையிலிலை கோயிலின்று நேர்ந்த தினவீட்சி
தன்னுழைப்பால் தன்பொருளால் தானமைத்த கோவாழ்த்த
என்னெவனோ நிற்பான் எதிர்த்து. 115

எத்தனை ஆண்டவர்கள் எத்தனை பெண்டுபிள்ளை
அத்தனை பேரிடையும் ஐயோ அடிதடிகள்
மெத்த கதைவிரித்தார் மேன்மை இலாதேற்றோம்
பித்தரே வேறென் பிறிது. 116

ஐவர்க் கவளொருத்தி ஆனாலும் பத்தினியாம்
ஐவர்க்கும் மேலாய் அவட்காசை கன்னனிடம்
தாமறியார் கண்ணகியைத் தாழ்ந்த மனத்தாட்குத்
தீமிதிப்பார் நல்லறிவைத் தீய்த்து. 117

கற்பிற் சிறந்தாட்குக் கண்ணகிக்கு வைத்தசிலை
பொற்பில் நமையொப்பார் புன்தொழிற் கேதமென்று
பேர்த்துச் சிறையடைத்த பேதையரை யாரெதிர்ப்பார்
நீர்த்த தறிவின் நெறி. 118

ஆற்றில் குளிபெண்கள் ஆடை தமைத்திருடல்
மாற்றார் மனைவியர்தம் மார்பணைத்தல் ஆற்றலரை
வஞ்சகத்தால் கோறல் வாய்த்த இறைவர்க்(கு)
எஞ்சலிலா ஆட்டம் இவை. 119

வேண்டுதல் வேண்டாமை இல்லாத மெய்யிறையை
யாண்டிவண் தேடி இனிதே எடுத்துரைப்பார்
கட்டிளங் கன்னியரை ஒட்டிக் கலக்காமல்
விட்டவிறை உண்டோ விளம்பு. 120

கற்றபடி நிற்குங் கருத்தில்லா மூடரிவர்
சுற்றித் தமையழிக்குஞ் சூழ்ச்சித் திறனறியார்
வெற்றாம் பழங்கதையை வேண்டிப் பகுத்தறிவை
விற்றார் படுகுழியில் வீழ்ந்து. 121

கடவுளில்லை பொய்புரட்டே கண்டுரைத்தார் நட்ட
நடவிற்கு நீர்ப்பாய்ச்ச நாட்டமிலா ஆட்சியரால்
எங்கும் இறைபெயரால் ஏமாற் றினத்தாழ்ச்சி
தங்கும் புரட்டு தழைத்து. 122

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காணறிவு மேன்மையிலாக் கீழ்மையினர்
ஆட்சிப் பொறுப்பமர்ந் தாண்ட சுவையதனால்
வீட்சிக் குரமானார் வீழ்ந்து. 123

எத்தனைதான் யாருரைத்தும் என்னபயன் இந்நாட்டார்
பித்தர் எனப்பிதற்றிப் பேதைமையில் ஆழ்ந்திடுவர்
வஞ்சகத்தால் வந்தவினம் வாழ்ந்தோங்க வாழ்ந்தவினம்
தஞ்சம் அடையுதையோ தாழ்ந்து. 124

# 7. தேடக் கிடைத்த திரு

மின்னும் உடுக்களில் மேலாம் ஒருமீனை
இன்னல் உளத்தாள இங்கங் கெனவிழிகள்
தேடித் திரிந்தலையத் தேய்ந்தான் திளைத்தற்கு
நாடிற்று வெள்ளி நடந்து.

**தேடித் திரிந்துமுன்னர்த் தேரா இளஞ்செழியன்**
**நாடி இருந்தான் நடு.**

வாயிற் புறத்தருகே வட்டக் கிணறொன்று
கோயில் நுழைவாரில் கொண்டவளைக் காண்பதற்குச்
சுற்று மதிற்சுவரில் தோய்ந்தான் இளஞ்செழியன்
சுற்றும் மனமலைந்து சோர்ந்து. 125

உச்சி மலைத்தேனும் உண்டறியா நல்லமுதும்
நச்சி எழுதவரு நற்பாட்டும் போன்றவளை
ஒட்டி உரசுதற்கும் ஓரிருசொல் சாற்றுதற்கும்
எட்டிய இந்நாள் இனிது. 126

வாராளோ இன்றேனும் வந்து கடைவிழியால்
பாராளோ என்துயரைப் பார்த்து முகமலர்ந்து
தாராளோ தன்னிசைவைத் தந்து மகிழ்வளித்துத்
தீராளோ இன்காமத் தீ. 127

மானோ மழப்பிடியோ மல்லிகைப்பூம் பந்தரோ
தேனோ திரட்பாலோ தேர்ந்தமைந்த தீம்பாவோ
ஏனோர் பலரடைவர் ஏனோவென் இன்னுயிராய்
ஆனாள் அடையாள் அளிது. 128

**பாராது பட்டதுயர் பட்டென்று பட்டுவிழத்**
**தேராக வந்தாளத் தேன்.**

காய்ந்து கருகிக் களையிழந்த நெற்பயிரும்
சாய்ந்த தலையுயர்த்தச் சார்மழை மேகம்போல்
ஓய்ந்த உடலினனாய் உட்காய்ந்தோன் மீட்சிபெற
வாய்த்தாள் எழிற்சுமந்த வாறு. 129

**எல்லாம் இழந்தான்மீண் டெய்தவழி கண்டனெனச்**
**சொல்லால் உளமுரைப்பான் சூழ்ந்து.**

பார்நண்பா பாரிவளைப் பார்வையால் கொன்றென்னைத்
தீர்த்திடு தீத்திறத்தைத் தேன்விழியாள் பெற்றதென்னை
வேர்க்கும் உனக்கெதற்கு வேதனையுந் தானெதற்(கு)
ஆர்க்குமென் நெஞ்சம் அடித்து. 130

யாரிவள் எந்தவூர் ஏதும் உறவுண்டா
பேரெதுவோ கூறிடுக பித்தம் தலைக்கேறும்
எண்ணம் அறிந்திருந்தும் ஏனென்னை வாட்டிடுவாய்
உண்ணிலைமை சொல்க உணர்ந்து. 131

சென்று தொடர்ந்திவளைச் சேர்த்திடலாம் செய்தியெனின்
நின்றுடன் செல்வர் நிழலன்ன தோழியரும்
ஒன்றும் புரியவில்லை உற்ற உயிர்நண்ப
நன்றொன் றெனக்கு நவில். 132

பட்டுத் தெறித்தலிலாப் பார்க்கும் இருவிழிகள்
சுட்டுப் பொசுக்குதென்றன் சோர்வை ஒருநொடியில்
செல்வோம் இவள்தொடர்ந்து சேரும் சிறப்படைந்து
நல்லோய் எழுக நயந்து. 133

**கோட்டுப்பூ வேண்டிக் கொடுபுலிவாழ் காட்டை**
**நண்ணுவரோ ஆய்ந்தார் நடப்பு.**

என்னுரைப்பான் கண்ணன் எழுவிளைவை நன்றறிந்தோன்
கன்னல் விழைந்தெவரே காட்டாற்றில் நீந்திடுவார்
தேன்வேண்டின் அங்காடி தேடிப் பெறுவதன்றித்
தேன்கூட்டில் கைவைப்பா தீங்கு. 134

உயிரே இவளென் றுறையுமென் நண்ப
உயரே நெருங்கலிலா ஒண்குறிஞ்சிப் பூவிவளே
வாழவுயிர் ஆசையெனின் வந்திடுக என்பின்னர்
ஊழிவளே யார்க்கும் உணர். 135

பின்தொடரல் வேண்டா பிறரறியின் தீதாகும்
இன்னல் இவளுருவே எண்ணின் இருளாகும்
செல்வோம் உடன்வீடு சென்றதும் நானறிந்த
சொல்வேன் உனக்குத் தொகுத்து. 136

# 8. வேதனைக்குக் காரணமாம் வித்து

போதேக வாடு பொழில்மலர் போலெழிலி
தீதேது கொண்டாள் தெரிந்தெமக்குச் சொல்கவென
அத்தை வழிமறித் தப்போ துரைத்ததனை
மெத்த நினைத்தல்லி மேன்மாடி ச்ன்றெழிலி
ஒற்றைத் தனிமரமாய் ஓடாய் ஒளியிழந்து
நிற்றலைக் கண்டாள் நெகிழ்ந்து.

**ஏதிங் கியைந்ததுவும் எண்ணி இசைத்திடுக**
**வேதனைக் கான விளைவு.**

மாமன் மகளே மணிவாய் மலர்ந்திடுக
ஊமனென உள்ளாய் உனக்கழகோ நாமிருவர்
யாரோ எவருமில்லை என்றும் இணைபிரியாத்
தீரா உறவினரே தேர். 137

என்னிடத் துன்குறையை இன்றுரைக்க என்தயக்கம்
இன்னல் இணையவுனை ஏற்பேனோ என்றுமிலை
அன்னைதந்தை உன்னகத் தாற்றாமை ஆய்கவென
என்னை ஏவிட்டார் இன்று. 138

உள்ளொடுங் காமையாய் உள்ளாய் சிலநாளாய்
எள்ளற் கியைந்ததுவும் ஏற்றாயோ சாற்றிடுக
வெள்ளை உளத்தவளே வேண்டா வெறும்பேச்சு
கள்ளம் அகற்றிக் கழறு. 139

**யாரோ ஒருவனவன் யான்குளிக்கப் பார்த்திருந்தான்**
**தீராத் துயர்விளைக்குந் தேய்த்து.**

மெல்ல விழியுயர்த்தி மின்னெழிலி தன்னகத்துச்
சொல்லக் கருதிட்ட சூழ்ந்தெடுத்துச் சொல்வாள்
செறுப்பு நரலோடு செல்வார்யார் செய்யுள்
பொறுப்பரோ புன்மை புரின். 140

( செய் — வயல்.)

யாரு மிலையென் றியலிழந் தின்னுணர்வில்
நீருற்று நீந்தி நிலைமறந்தேன் ஈரமிகு
மெல்லுடையில் மேனியெழில் மேய்ந்து மிலைந்திட்டான்
கொல்லுமே துன்பங் குடைந்து. 141

(மிலைந்து — மயங்கி.)

என்னழகை எப்படி எந்நிலையில் துய்த்தானோ
உன்னி உளங்கெட் டுருக்குலைவேன் கன்னிக்
கழிதலிலாக் கட்டுடலைக் கண்டதனால் காமம்
விழிமிளிர நின்றான் வெறித்து. 142

(மிளிர — ஒளி செய்ய.)

**யாரோ இழைதவற்றுக் கின்னல் உறலியல்போ**
**காரோ கழிநீர்க்குக் கால்.**

எண்ணில் உயிரினங்கள் எண்ணின் நமைத்தவிர
மண்ணில் உடைகொண்ட மரபுண்டா உண்ணகிலை
அல்குல் தொடையழகை ஆர்க்கும் அவையகத்தே
நல்கற்கும் உன்னாரே நாடு. 143

கண்டான் கரந்தொருவன் காய்ந்து கலங்கிடுவாய்
கொண்டால் குறையற்குக் கொள்பொருளா மெய்யழகு
உச்சி உறைநிலவை மெச்சி உருகார்யார்
எச்சிற் படுதலென்றும் இல். 144

நெஞ்சத்தில் வஞ்சமில்லை நின்னின் நிறையுளர்யார்
அஞ்சற்க அஞ்சுவ அஞ்சும் அறிவோயே
வேண்டா நினைவுகளால் வேதனையோ வேண்டாநீ
தீண்டா எரிச்சுடரே தேள். 145

பேறாய்ப் பிறந்தவளே பேதைமை கொண்டான்யார்
கூறாய் கொடியோனைக் கூறாய்ப் பகுத்திடுவேன்
நம்மை அறிந்திருந்தும் நாணற் கிடமமைத்தான்
சும்மா விடுவதோ சொல். 146

**அல்லியுரை சொற்கள் அகத்துக் குறைநீர்க்க**
**வல்லியலாள் சொல்வாள் வகுத்து.**

என்னத்தை பெற்ற இனியவளே என்தோழி
என்ன உரைத்தற் கினியுமுண் டுன்னுரைதான்
ஓடி உழைத்தவர்க் கோய்வாய் உரமூட்டும்
நாடல் இலைநான் நலிவு. 147

போற்றா புரிந்தான் புதியன் பொறுப்புமிலான்
ஏற்றா அனையன் எனினுமென் நோயுற்றுப்
பட்டுத் திரும்பியன்போற் பார்வை பகட்டுடைகள்
பட்டினத்தான் போலும் பதிவு. 148

(ஏற்றா — ஏறு + ஆ — எருது, காளை மாடு)

**ஓண்டாள் உரைமொழியால் ஓல்லான் எவனென்ற்**
**கண்டாள் அல்லி கணித்து.**

நன்றுநீ கூறியவை நானறிவேன் அன்னவனைக்
கன்றிய நெஞ்சத்தன் காலறிவன் கற்றிருந்தும்
குன்றனைய செல்வத்தாற் குன்று குணத்தினனாய்ச்
சென்றிணைந்தான் தீவுறவோர் சேர்பு. *149*

உண்டுடுத்தி நட்பர் உடன்சூழ உள்ளியபோல்
கண்டவையே காட்சிகளாய்க் கட்டறுந்த காளையனாய்ச்
சுற்றித் திரிந்தலைந்த சூதனவன் சின்னாளில்
பற்றிப் படர்ந்தான் படர். *150*

(படர் — துன்பம்.)

உழைப்பை உணராதார் உற்றுணர்வில் லாதார்
இழைப்பார் பெருந்துயரம் யாரறியார் இவ்வுலகில்
தேடித் திரிந்துழைத்துச் சேர்த்துவைத்த தேன்திரட்டைச்
சாடி எடுத்தினிப்பர் சான்று. *151*

மலர்க்கு மலர்தாவு வண்டியல்பு மாந்தர்
குலப்பெருமை கல்வி குறியாராய் மாறுமியல்
மன்னா மகளிரெழில் வைத்த மனத்தாசைத்
தன்னால் அழிவர் தளர்ந்து. *152*

தந்தை பெருஞ்செல்வர் தானோ ஒருமகனாம்
விந்தை பிறகென்ன வேண்டிந ஆறெல்லாம்
கூடார் நலன்துய்க்கக் கொண்ட கருத்தன்றி
நாடான் ஒழுக்க நலன். *153*

பெண்ணே பெரும்பேறாப் பேதுற்ற நெஞ்சினனாய்
எண்ணா இளமதர்ப்பில் ஏற்றமிலாச் செய்திழிந்த
பொல்லான் இளஞ்செழியன் போற்றா புரிந்ததனால்
நில்லான் நன்னலத்தில் நீண்டு. *154*

கள்ள மனங்கொண்ட காரிகையர் பொய்யுறவால்
எள்ளற் கியைந்த இழிநோய்கள் தாமியைய
மாதம் இரண்டை மருத்தவத்திற் போக்கிப்பின்
ஏதம் தெளிந்தான் இளைத்து. *155*

ஆர்க்கும் அளிக்காமல் ஆனாப் பெருந்திருவை
பார்க்குள் பதுக்கிவைத்துப் பார்த்திழந்து போனார்போல்
வாணாள் நறுங்கூற்றை வாழாமல் போனமையால்
காணான் உலைந்தான் கசந்து. *156*

(ஆனா — கெடா, குறையா.)

பெண்டுபிள்ளை செல்வம் பெரும்புகழும் நீணட்பும்
கண்டிடுதல் மீளக் கடிதில்லை காணின்
விரும்பி உழைத்தாலும் வேண்டிடினும் மீண்டு
திரும்புவதோ நல்லிளமைத் தேன். 157

வருமுன்னர்க் காவாது வந்ததன்பின் வாடும்
வெருவளி செய்கையினால் வெட்கி மிகவருந்தி
வற்றா வளம்பயக்கும் வண்ண மலர்ச்சோலைச்
சிற்றூரைச் சேர்ந்தானச் சேய். 158

(வெரு — அச்சம்.)

சிற்றூர் நறுஞ்சூழல் சேர்ந்த இளந்தென்றல்
உற்றார் உறவினர் உள்ளார்ந்த நன்னண்பர்
கற்றார் இணையர் கவினார்ந்த சொற்றுணைவர்
உற்றாலென் உண்டோ உயர்வு. 159

பாழாம்மெய் கொண்ட பழக்க வழக்கங்கள்
வீழாமல் மேன்மேலும் வேதனை தந்தடுக்கப்
பொல்லாக் குடியுறவும் பூவையர்தம் மெய்முயக்கும்
இல்லா திருத்தலோ இல். 160

தீச்செயலை நீக்கித் திருந்த இருந்தானை
வீச்சறிவாள் உன்னழகு வீழ்த்தியதில் விந்தையிலை
பற்றற்ற பெற்றியரும் பற்றவுனை வேட்பரெனில்
குற்றமவன் உற்றதிலென் கோது. 161

(கோது — தவறு, நெறி தவறுகை.)

# 9. கொம்பிழந்த வஞ்சிக் கொடி

கொளற்கும் உரியளிலை கூடா நினைப்பென்(று)
இளஞ்செழியன் ஆசை இயலா நிலைமைக்கு
முன்னர் நடந்தவற்றை முற்றும் மறைத்தலற்றுச்
சொன்ன மொழிகேட்டுச் சோர்ந்தானை மீட்டற்குத்
தேற்றுந் திறன்தேடித் தேர்ந்தும் திறனிலனாய்
ஆற்றுவான் கண்ணன் அமைந்து.

**பெண்ணிற் கரசி பெறற்குத் தனியளில்லை**
**கண்ணன் உரைப்பான் கனிந்து.**

என்னினிய நண்ப இளஞ்செழிய என்னுரைக்க
உன்னைக் கவர்ந்திட்டாள் உள்ளுரே ஆயினுமென்
இன்னொருவன் கைபிடித் தின்றோடு மூவாண்டு
சென்ற தறிந்துமேற் செய். 162

எழிலி அவட்பெயரே எப்படித்தான் இட்டனரோ
எழிலுக் கெழில்சேர் எழிலே எழிலுருவில்
கற்பனைக்கும் எட்டாக் கவினழகாய்த் தான்வளர்ந்து
சிற்பமென ஆனாள் சிறந்து. 163

கண்ட இளைஞரெலாம் காணாளோ நம்மையென்று
பண்டு தொடர்ந்தலைந்தார் பாராள் ஒருவரையும்
உற்றார் உறவினர் ஒத்தார் எதிரன்றி
மற்றார்முன் நில்லாள் மதித்து. 164

கற்றாள் எனினுமென் காணாள் மனவுலைச்சல்
பெற்றோர் பெருமையலால் பேணாள் பிறிதெதையும்
தந்தை உடன்பிறந்தார் தங்கை தமிழ்ச்செல்வி
மைந்தனையே சேர்ந்தாள் மணந்து. 165

**மாற்றார்க் குரியளெனு மாற்றத்தால் உண்ணடுங்க**
**ஆற்றான் செழியன் அதிர்ந்து.**

வாயில் விழைந்தான் வருந்தி மனமுலையக்
காயன்றிச் சேர்ந்த கனியால் கறைபட்ட
வெள்ளைப் பொருடெகேட்டு வேண்டாத் துயராழி
துள்ளி விழுந்தான் துடித்து. 166

கேட்கத் துடிதுடித்தான் கேட்டுக் கடுகடுத்தான்
வேட்ப அழகுடையாள் வேறொருவன் இல்லக்
கிழத்தி யெனவறிந்து கேடுமிக ஆவி
பிழைத்தனென ஆனான் பிறழ்ந்து. 167

**கொண்டான் உளனெனிலோ கோதில் எழிலுறைதல்**
**உண்டாமோ பெண்பால் உரை.**

எங்கும் இருட்டொடர எண்ணம் மருட்படரப்
பொங்கு பெருந்துயரில் பொன்றும் செழியனுளம்
திங்களிலா வானில் தெறித்தவரு மின்னலெனக்
தங்கியதோர் எண்ணம் தளிர்த்து. 168

காலைக் கதிரவனைக் கண்டுமகிழ் கொண்டுமலர்
சோலை மலரனைத்தும் சோர்ந்துதுயர் மண்டவயர்
வாட்டு வடிவழகின் வாழ்க்கை வரலாற்றில்
கோட்டம் உளவாக கொள். 169

நன்று மொழிந்தவையும் நண்ப விடையிறுப்பாய்
மன்றல் முடிந்தளெனின் மங்கல நாணிருக்கும்
மெல்ல இசையெழுப்பு மெட்டி விரலிருக்கும்
இல்லை அவளிடத்தே ஏன். 170

என்னை அறிவாய்நீ எத்தனையோ பெண்களைநான்
முன்னர் உடையின்றி முற்றும் சுவைத்தவன்தான்
கன்னியுடல் என்றுங் கறைபட்ட திஃதென்றும்
நன்றாய் அறியேனோ நான். 171

காலை எழுவொளியில் கற்கண் டெழிலுடலைச்
சேலை சிறிதுமின்றிச் செவ்விழிகள் ஆட்டமின்றிக்
கண்டு புலனொன்ற உண்டு களித்தோன்நான்
கொண்டதில் ஐயம் குறி. 172

தூங்கு முலைமுனைதம் தோற்றப் பொலிவொன்றே
நாங்கள் பிறர்கை நகமறியோம் என்றதட்டும்
நீர்பட்டு மின்னி நெளிந்தசைந்த பட்டுடலம்
யார்கையும் பட்டறியா ஏல். 173

(ஏல் = ஏற்பாயாக)

கோடைக் கிளிரமதக்குங் குற்றம்நாம் கூறிடுவோம்
ஆடை சிறிதுமிலா அவ்வழகு மேனியிலே
இம்மியும் எக்குறையும் எவ்விடத்தும் இல்லையில்லை
செம்பொருள் அன்னாளச் சேய். 174

( இம்மி = 10,75,000 இல் ஒரு பங்கு.)

இற்றிடுவேன் என்றுநெளி இன்னிடைக் கீடாமோ
கற்றுவலார் சொன்ன கவினடையும் நற்பொருளும்
அள்ளக் குறைதலிலா ஆணிப்பொற் பெட்டகமே
கள்ளி அவளுடலம் காண். 175

(ஆணி = முதன்மை, மேன்மை)

என்னை வழிமாற்ற ஏதேதோ சாற்றுகிறாய்
இன்றுமவள் நாண்மலரே எச்சிற் படாவமுதே
கொண்டான் உளனெனிலோ கொண்டானில் உள்ளுடலைப்
பண்டு நிகழ்ந்த பகர். 176

**பெண்ணிற் இளஞ்செழியன் பெற்றிருந்த பட்டறிவைக்**
**கண்ணன் வியந்தான் கரைந்து.**

செழியன் உரைத்த செவிமடுத்த கண்ணன்
விழிகள் விரித்து வியப்பை வெளிப்படுத்தக்
கட்புலனைக் காரிகையர்பால் காட்டாத் தன்வெறுமைக்(கு)
உட்குலைந் துலைந்தான் உளம். 177

**முன்னம் நடந்தவற்றை முற்றும் அறிந்திடவும்**
**இன்புற்றான் நெஞ்சம் இழந்து.**

உண்மை உரைத்தவையே உன்னுள் உறைபவளோ
பெண்மை நிறையுடையாள் பேணாள் குறையெதையும்
மன்றல் முடிந்தவன்றே மானாள் தனித்தானாள்
என்றும் சுவைத்ததெதும் இல். 178

பெண்ணாய்ப் பிறந்ததலால் பேதமிலாப் பேறுடையாள்
கண்ணாய் வளர்ந்ததனால் கண்ணூறு பட்டதுவோ
யார்யாரோ வண்டாக ஏங்கித் துடித்தலைந்தார்
நேர்பாராள் எங்கும் நிமிர்ந்து. 179

பூத்தால் மணம்பரப்பும் புன்னகைக்கும் வண்டழைக்கும்
பூத்தாள் எழில்விரித்தாள் பொன்னாய்ப் பொலிந்திழுத்தாள்
வண்டாய் இளைஞரெலாம் வாயில் அருள்வேட்டும்
கண்டாரில் அன்னாள் கனிவு. 180

**மருளிலா நன்மனத்தர் மானார்மேல் அண்ணார்**
**ஒருதலையாய்க் கொண்டார் உளம்.**

சொந்தம் அவட்குநாம் சூழின் ஒருவழியில்
அந்த உரிமையிலென் அண்ணன் அருளாளர்
காதல் எழில்மேல் கருத்தற்றுக் கொண்டதனால்
நோதக்க எண்ணிட்டார் நொந்து. 181

நிழலாய்த் தொடர்ந்திருந்து நேரில்நன் னெஞ்சத்
தழலை வெளிப்படுத்தித் தாளாத்தன் காதல்
பயிருக் கொளிகேட்டும் பாராளே என்ற
துயரில் துவண்டார் துடித்து. 182

**அத்தை மகனார்க் கழகி எழிலியினை**
**ஒத்தளித்தார் மன்றல் உறவு.**

மூன்றாண்டு முன்னர் முடிந்த தவள்வாழ்க்கை
ஈன்றார் உறவினர்எல் லாரும் இணைந்திருந்து
அத்தை மகனார்க் கடுத்தார் மணவிழவில்
செத்ததன்றே இல்வாழ்க்கைச் சீர். 183

அத்தை மகனுக் கவளை மணமுடிக்க
அத்தைக்கும் ஆசையிலை ஆயின் அவராசைப்
பட்டதனால் யாரும் பகரார் எதிர்த்தெதுவும்
குட்டக் குனியார்யார் கூறு. 184

அன்னோன் மிகமுரடன் அத்தோ டடியாட்கள்
உன்னான் உறுபழிக் கூறிழைப்பான் என்செய்வர்
அத்தை மகன்வே றடுத்துரைக்க ஆளேது
மெத்த சரியென்றார் மென்று. 185

**மன்றல் மறிக்கவெனச் சென்ற அருளாளர்**
**பட்டார் குறுவாட்குப் பட்டு.**

ஆற்றாச் சினப்பெருக்கிற் காளான அண்ணனுக்குக்
கூற்றாய்ச் சிலநண்பர் போற்றா மொழிந்திடவும்
மன்றல் நிகழ்மனைக்குச் சென்றார் மறித்தற்குக்
குன்று பகுத்தறிவைக் கொண்டு. 186

எழிலார் இசைவுனக்கே என்றுரைக்கச் சில்லோர்
உழுவார் களர்நிலத்தை ஒப்ப உடன்றெழுந்து
நட்ட நடுத்தெருவில் நால்வரில் தானுமாய்ப்
பட்ட மரமானார் பட்டு. 187

**கொண்ட பொழுதன்றே கொன்றிட்டார் நால்வரினைக்**
**கெண்டை விழியாட்கே கேடு.**

கொண்டாள் மணமாலைக் கோலம் கலையுமுன்னே
கண்டார் மருண்டோடக் காவிட்டார் தன்மணத்தில்
தொல்லை விளைவித்த தோழருடன் அண்ணனையும்
எல்லாம் சிலநொடியில் என். 188

கட்டிய தன்கணவர் கண்ணெதிரே மாற்றலரை
வெட்டிக் கொலைசெய்த வேதனைக் கென்செய்வார்
வெட்டச் செடிமுளைக்கும் வேரறுந்த பெண்ணவர்க்(கு)
ஒட்டலிலை கொண்டோன் உறவு. 189

ஒன்றா இரண்டா உருத்தெழுந்து நான்குயிரைக்
கொன்றார் அவர்துயரைக் கூறிடவும் ஆறிடுமோ
கண்களுக நீரின்றிக் காய்ந்த ஒளியிழந்த
பெண்ணவரோ இன்று பிணம். 190

இன்னும் உரைத்திடலாம் என்றாலும் போதுமிது
கன்னி அவர்கணவன் அண்ணன் கழுத்தறுத்தான்
ஆக நமக்கவர்தாம் ஆகாதார் ஆதலினால்
ஏகியுளம் தேற்றி இரு. 191

# 10. காதற் கடைத்த கதவு

சூடா மலரெழிலி சொத்தாய்த் தனையடைதல்
கூடா வெனவறிந்தும் கோலநெடுங் கோயிற்கு
இறையருளை நாடி இரப்பாளைத் தேடிக்
குறையிரப்பான் நெஞ்சங் குலைந்து.

**வேலவன் கோயிற்கு வேல்விழியாள் சென்றிடவும்**
**மாலவன் போனான் மகிழ்ந்து.**

வெள்ளிக் கிழமைதொறும் வேலவன் கோயிற்குத்
துள்ளுமெழில் அல்லி துணையாய்த் தவறாமல்
சென்று தொடர்ந்துதொழு செய்தி தெளிசெழியன்
அன்றுந் தொடர்ந்தான் அருகு. 192

கையிற் சிறுகூடை கண்ணில் அருட்பார்வை
பைய நடந்திடவள் பார்வை விலகலில்லை
உள்ளக் கரவுடையன் ஊசி தொடர்நூலாய்ப்
பள்ளநீர் ஆனான் படர்ந்து. 193

இரங்கக் கசிந்திரந்தும் இம்மி அசைவுமிலாக்
கருங்கற் சிலைக்கடவுள் காட்டானோ மீட்சியென்று
பாடினர் பூவால் பரவினர் வெண்ணீறு
சூடினர் உள்ளமைதி சூழ்ந்து. 194

**தொடர்வான் துயர்நீங்கத் தோழியை விட்டேகி**
**நடந்தாளின் னல்லி நகர்ந்து..**

வலம்வந்தார் ஆண்டவனை வந்துவெளிச் சுற்றில்
இலமென் றிருந்திட்டார் எண்ணிட்டாள் அல்லி
தொடர்வான் நமையெதற்கோ சொல்லற்கும் வாய்ப்பாக
இடந்தருவோம் என்றாள் எழுந்து, 195

**தன்னந் தனியளிடம் தன்காதல் கூறற்கு**
**முன்னினான் மொய்குழலாள் முன்.**

காணாதான் காணக் கடுகி விரைவான்போல்
பேணான் புலனெதையும் பெண்ணாள் தனைநெருங்கிக்
கொட்டருவி நீராய்க் குதித்து மடைதிறந்தான்
மட்டறிவாள் கேட்டாள் மலைத்து. 196

என்னை மறந்திருத்தல் ஏலா தெனவறிவேன்
என்றன் நினைவிருந் தின்னல் இழைத்துவரும்
நன்றல நானிழைத்தேன் நாணிக் குறுகிடுவேன்
குன்றிடும் உள்ளங் குமைந்து. 197

அன்று புதியன்நான் ஆகா புரிந்திட்டேன்
இன்று திருந்தியுளம் எண்ணி இளைத்திடுவேன்
தண்ணீர்த் துறையிடத்துத் தற்செயலாய் உன்னழகை
உண்டேனுக் குண்டோ உயர்வு. 198

கள்ள விழிப்பார்வை காணற் கருவெழிலை
அள்ளி மிகப்பருக ஆற்றா அகவிருப்பால்
எள்ளற் குறுதவற்றை எண்ணாமற் செய்ததனை
உள்ளக் குறுகும் உளம். 199

கன்னல் உடலழகைக் கண்டு களித்தோனை
என்ன இழித்துரைத்தும் என்ன பயனெட்டும்
உண்ணற் கருநீரில் ஊட்டிட்ட நஞ்செனவே
பண்பில் விளைந்த பழுது. 200

கொண்ட கொழுநனுமே கொள்ளாக் குளிருடலைக்
கண்டு கறையிழைத்தேன் காணேன் கழுவாயும்
உன்னி உளங்குலைவேன் உள்ளேன் உளவெதையும்
மன்னிப்பின் மாணும் மனம். 201

**வேண்டா இழைத்தமைக்கு வேதனை பட்டானை**
**ஆண்டாள் அருளாள் அணங்கு.**

போதும் புலம்புவன போகட்டும் விட்டிடுக
தீதென் றுணர்ந்திட்டீர் தேவையிலை மன்னிப்பும்
வேண்டி வணங்கிடுவேன் வேண்டா மிகைப்பேச்சு
தோண்டப் பெருகுந் துயர். 202

நடந்து முடிந்தவற்றை நாம்பேசல் நன்றோ
முடிந்த முடிந்தவையே முன்னேற்றம் தாரா
அடுத்துச் செயற்பால ஆய்ந்தறிந் தேற்பின்
கடுத்த எலாம்போம் கடிது. 203

**எட்டியது வாய்ப்பென் றிளஞ்செழியன் தன்னெஞ்சைக்**
**கொட்டிடுவான் கொசண குறித்து.**

நன்றே நவின்றிட்டீர் நல்லவற்றை நாமெண்ணி
நன்றாற்ற நம்வாழ்வில் நாளும் நலமன்றோ
பண்பிற் பழுதிலாப் பைம்பொன்னிற் பாங்குடையீர்
விண்ணப்பங் கேட்டிடுக வீற்று. 204

உனைக்கண்ட அன்றிருந் துன்னையன்றி வேறோர்
நினைவின்றி நின்றெரிக்கும் நெஞ்சம் நெருப்பாய்
இருந்துவரும் இன்னல் இழைந்தரற்றும் நீயே
மருந்தில்லா இந்நோய்க்கு மாற்று. 205

ஓயேன் உறங்கேன் ஒருதொழிலும் மேற்கொள்ளேன்
நாயேன் உனைச்சுற்றி நச்சிக் குழைந்திடுவேன்
அம்மைக் கழுகுழந்தை அன்ன அழுதயர்வேன்
இம்மைக்கு நீயே எனக்கு. 206

எப்பக்கம் நோக்கிடினும் எப்பொருளைப் பார்த்திடினும்
ஒப்பரிய உன்னுருவே ஓங்கி உயிரழிக்கும்
கொப்பிற் கிளைத்தகனி கொண்டோர் பசிபோக்கும்
அப்படியே நீயெனக் காம். 207

**எல்லாம் அவளென் றெடுத்து மொழிவானை**
**நல்லாய் எனத்தடுத்தாள் நன்று.**

அறிந்ததிலை முன்னரெனை ஆயினுமென் நெஞ்சைத்
திறந்துரைப்பீர் காதலென்பீர் தேவையோ இன்னொருவர்
பெண்டு தனைவேட்கும் பேதைமை நீரெச்சில்
உண்டு களித்த உயர்வு. 208

கேட்டுத் தெரிந்தறிந்தேன் கேளிர் பலரிடத்தும்
வேட்டுப் பொதுமகளிர் வேள்வி நடத்தியதால்
தொட்ட துயரகலச் சூழ்ந்தும் தொடர்ந்தலைவீர்
விட்டகலா காமம் விரைந்து. 209

**செய்தவற்றைச் சொல்லிச் செயிர்தீர்சீர் சேல்விழியாள்**
**மெய்தழுவ வேட்பான் மெலிந்து.**

இல்லை எனவுரையேன் எல்லாம் முழுவுண்மை
பொல்லார் துணையெனக்குப் போதாதா நான்கெடற்குக்
கெட்டார்க்குப் பட்டினமாம் கேடுற்றேன் கைக்காசால்
ஒட்டா தினியவ் வுறவு. 210

பிறன்மனை நோக்கலிலாப் பேராண்மை என்றன்
திறமென்று நீதெளிக தீதிலான் நானறிக
கட்டியுனைக் கைபிடித்தோன் கல்லறையுள் உள்ளதுவும்
எட்டிய தென்றோ எனக்கு. 211

வன்முறையால் வாழ்ந்தார் வரலாற்றில் யாருள்ளார்
கொன்றவர் தாமுங் கொலைப்படுவர் வாழ்க்கைநெறி
வித்தொன்று நட்டால் விளையாது வேறொன்று
செத்தார் எழிலிளமை தீய்த்து. 212

எத்தனையோ கட்டழ கேந்திழையர் பொய்யுறவில்
மெத்த சுவைத்தாழ்ந்து மெய்மறந் தோய்ந்திருந்தும்
தொட்டும் அறிதலிலாத் தூயவுனை ஒட்டவுளம்
கட்டறுத்துச் சுற்றுங் கனன்று. 213

அழகென்றால் என்னென் றறியாமூ டன்நான்
ஒழுகுநீர் சொட்ட உனைக்கண்ட அக்கணமே
கண்டேன் அழகனைத்தும் காண்பேன் எழிலெதிலும்
மண்டா மனத்துள் மருள். 214

வாழ்க்கை வழியறிந்து வாழுநெறி வாய்ப்பின்றித்
தாழ்ந்தேன் தளிரார் தழுவலே தஞ்சமென்று
நன்னெறிக்கு நான்திரும்ப நற்றுணையை நாடிடுவேன்
ஒன்றின் உயர்ந்திடுவேன் உய்த்து. 215

**காதற் குரியளிலை கைம்பெண்ணாள் வேண்டாதாள்**
**தீதற் றகல்க தெளிந்து.**

எதற்குத் தவளையென ஏதுமிலாச் சொல்வீர்
பிதற்றல் தவறாகும் பேசு முறைதவிர்க
கண்ட உடன்காதல் காவியத்திற் கேற்பாகும்
அண்டலில் வாழ்வில் அது. 216

பொம்மைக் கழுகுழந்தை போதைக் கலைமாந்தர்
தம்மை உணர்வதில்லை சாக்கடைநீர் அப்படித்தான்
போற்றார் உடலாழ்ந்து போனீர் நிலைதாழ்ந்து
தோற்றீர் ஒழுக்கம் தொலைத்து. 217

செய்க நெறிதெரிந்து சேரா இடும்பைகளும்
வெய்ய துயரளிப்ப வேண்டா முடிவெவையும்
எண்ணாச் செயலனைத்தும் மண்ணாய் இயலுமென்பர்
எண்ணீர் அகவை இயல்பு. 218

செல்க தனித்தமர்க செய்தக்க ஓர்ந்திடுக
நல்ல நமைநாடும் நம்நினைப்பும் நல்லதெனின்
உன்னால் உனைப்பெற்றோர் உற்றார் உறவினரும்
பின்னாள் பெறல்வேண்டும் பேறு. 219

என்னைப் பெறுவதனால் என்ன சுவைகூடும்
இன்னல் பலசேரும் ஏளனம் ஏராளம்
கன்னல் வெளிக்கிடந்து காய விறகாகும்
அன்னவளே நானும் அறி. 220

ஆலைக் கரும்புநான் ஆனை விளங்கனி
பாலை வனத்துநிலா பற்றறுந்த பட்டமுமாம்
சேலை உடுத்துலவு செத்த உடலமிது
மாலை இடாரே மடுத்து. 221

பொல்லாச் சினப்பெருக்கால் பொங்கித் தவறிழைத்(து)
இல்லாள் எனநிறுத்தி ஏகிட்டார் என்மாமன்
பொல்லார் அவரெனினும் போலிமை என்றுமில்லை
எல்லையில் அன்பென்மேல் இங்கு. 222

நாளும் புதுமலரை நாடல் உயிரியற்கை
ஆளும் இனமன்றோ ஆணினம்தான் அன்னவர்க்கு
வண்டும் அறிதலிலா வண்ண மலர்வேண்டும்
உண்டோ மகளிர்க் குயர்வு. 223

என்றன் துணைவேட் டெடுத்திசைத்த உங்கட்கு
நன்றி மிகுநன்றி நானேற்கேன் உம்குறையை
அல்லி அதோவருவள் ஐயாநான் சென்றிடுவேன்
செல்கவுள் வேட்கை சிதைத்து. 224

**ஆகா தெனவிட் டகல்வாள் அழிநடையால்**
**வேகாதோ உள்ளமிக வெய்து.**

மானொப்பத் துள்ளி மறைந்த மணிமொழியாள்
தானொப்பேன் என்ற தனிச்சொல்லே தாங்கொணா
ஆசைப் பெருக்கெடுக்கும் ஆழ்மனத்தில் கொந்தளிக்கும்
ஓசை உயர்த்தும் உலைத்து. 225

இருட்டி நெடுநேரம் ஏகவிருந் தாளை
வெருட்டிக் கதவடைத்தார் விண்ணுக்கும் மண்ணுக்கும்
காட்டாய் விளங்கியுயிர் காத்துப் படியளந்தும்
போட்டார் கடவுட்குப் பூட்டு. 226

# 11. நெரித்திடு காதல் நினைவு

கூடா உறவென்று கோறி மறைந்தவளால்
கூடாய் உறைவானின் கோட்டங் குறைத்தற்கு
கண்ணன் உரைசொற்கள் காணா இளஞ்செழியன்
மண்ணின் நிலையான் மனத்து.

**ஏற்கேன் எனக்கூறி இன்னுயரைக் கூறிட்டான்
காற்காசுக் காகுவோ காண்.**

என்ன எடுத்துரைத்தும் எல்லாம் விழலான
கன்னற் கனிச்சாறும் கைப்பதுண்டா — கன்னெஞ்சள்
ஏற்கேன் எனமொழிந்தாள் என்செய்வேன் யானுழல்வேன்
போற்றா நினைத்துப் பொடிந்து. 227

இல்லை அவளெனிலோ இல்லை உயிரெனக்குச்
சொல்லின்றி வாழ்வில் சுவையுண்டோ — நல்லவட்டான்
பொல்லா உலகியலும் போற்றாப் பழமரபும்
எல்லாம் எனக்கொண்டாள் ஈங்கு. 229.

பள்ளிச் சிறுவற்குப் பாடம் எடுப்பாட்போல்
அள்ளித் தெளித்தாள் அறிவுரையைக் — கள்ளியவள்
எல்லாம் தெரிந்திருந்தும் ஏளனம் செய்பவளாய்ச்
சொல்லாள் அளித்தாள் துயர். 229

ஒப்பேன் எனவுரைத்தாள் உள்ளம் உரைத்தாளில்
தப்பே புரிந்திருந்தும் தான்சாடாள் — முப்பாலில்
காமத்துப் பாலுக்குக் காட்டாய்க் கவினுடையாள்
ஏமம் இழைத்தாள் எனக்கு. 230

வாழ்ந்தால் அவளோடு வாழேன் பிறளோடு
சூழ்ந்தாலும் துன்பம் துணையவளே — தாழ்குழலாள்
இல்லாள் எனச்சேர என்னினிய நன்னண்ப
சொல்லாயோ நன்றாய சொல். 231

**அழுது துடிப்பானை ஆற்றுதற்குக் கண்ணன்
விழுமிய சொல்வதெல்லாம் வீண்.**

கண்ணன் எதைச்சொல்வான் காதல் மிகக்கொண்டார்
எண்ணம் இயல்பிழக்கும் ஏக்கமுறும் — எண்ணின்
இளஞ்செழியன் எண்ணாசை ஈடேற எண்ணில்
உளற்பால வாழ்விலிடை ஊறு. 232

காதற்குக் கண்மட்டோ கண்டேன் கருத்துமில்லை
சாதற்கோ காதல் சாற்றிடுக — மாதவளோ
கொல்லுதற்குங் கோணாக் குடும்பத்தர் கொன்றிடுவர்
நல்லதற்கோ காதல் நவில் 233

அழகி அவருண்மை ஆயினுமென் கைம்பெண்
பழுது வருமென்பர் பார்ப்பர் — கெழுதகைய
பெற்றோர் இருமருங்கும் பேணார் மணவுறவை
உற்றோரும் ஒப்பார் உணர். 234

(கெழுதகை = உரிமை உடைய)

ஆசை அவளிடத் தானாலும் அவர்க்கில்லை
ஓசை ஒருகையால் உண்டாமோ — மாசைத்
துடைத்தகத் தூயவனாய்த் தோன்றிடினும் காமம்
விடைத்தின்னற் சேர்க்கும் விரைந்து. 235

(விடைத்து = மிக்கு)

ஒருதலைக் காதற் குதவக்கேட் கின்றாய்
இருதலைக் கொள்ளிக் கிடையேன் — கருதிடுக
நம்மின் நமைவேட்போர் நாட்டம் உடன்படலே
இம்மைப் பிறப்பிற் கினிது. 236

காதல் புரியார்யார் காதலுண்டு சாகுமட்டும்
ஓதின் இனிய உயிரதுதான் — பேதமிலா
அன்பமை காதல் அடைந்தார் நலம்பேணும்
இன்மை அளிக்கும் இழப்பு. 237

தீதிலாக் காதற்குத் தேவை அருளுடைமை
ஏதம் பலவிளையும் எண்ணிடுக — காதலித்தால்
ஆறாத் துயர்ச்சுழலில் ஆழ்ந்தவர் மூழ்கிடுவார்
நீறாய்க் கரைந்திடுவார் நீர்த்து. 238

கொன்றானைக் கொன்று குலப்பெருமை கொண்டோம்நாம்
ஒன்றா உருக்கொண் டுழல்கின்றார் — சென்றானை
எண்ணி இளைத்துருகி இன்னலினும் ஏற்றிடுவார்
நண்ணார் நலமழித்தார் நட்பு. 239

**என்ன எடுத்துரைத்தும் ஏலான் இளஞ்செழியன்**
**இன்னுளத்தார் காதல் இயல்பு.**

சிற்றப்பன் பிள்ளை சிறந்தோன் எடுத்தாய்ந்து
முற்ற உரைத்த மொழிகேட்டும் — பற்றிகவான்
கல்லிலெறி பந்து கடுகித் திரும்பலென
ஒல்லை மொழிந்தான் உரை. 240

வேண்டா அவளென்று வேதனை ஊட்டாதே
தூண்டா மணிவிளக்குத் தூயவொளி — ஆண்டாண்(டு)
அழுகிக் கிடந்தவெனை ஆற்றருநீர் ஊற்று
பழகின் மறையும் பழுது. 241

# 12. தடுமாறு உள்ளத் தகைவு

காற்றில் இலையசையும் கல்லும் அசைதலுண்டோ
ஆற்ற விலாவெழிலி ஆடா தசையாது
கண்ணிமைத்தல் இன்றிக் கவறுநிலை கண்டல்லி
உண்ணிகழ்வை முற்றும் உணர்ந்தாளாய்க் கொண்ட
துயரோடப் பக்கத் துணையெனவே மெல்ல
இயைபோ டுரைப்பாள் இனிது.

**கருகு மலர்வாட்டங் கண்டு மிகவாடிப்**
**பெருகும் அருளாம் பெநல்.**

ஆடா தசையா தருகே அமர்ந்திருந்தும்
நாடாள் ஒருபேச்சும் நைந்திருந்தாள் — வாடா
மலரனையாள் மாற்றம் மனம்வருத்த அல்லி
இலமென் றிருப்பாளோ இல். 242

மாமன் மகளே மரபிற் கொருவிளக்கே
தூமணி வாய்திறந்து சொல்லடுக — நாமென்ன
பேசா மடந்தைகளா பேசிடுக பேசற்குக்
கூசாய் குறித்ததென் கூறு. 243

**உற்ற பருவத் துயிர்த்தெழு காதலினைப்**
**பற்றலிவ் வாழ்க்கைப் பயன்.**

அரண்டவன் கண்ணிற் கிருண்டதெல்லாம் பேயாம்
மிரண்டுளாய் நன்றன்று மீள்க — விருந்தன்னாய்
உன்னை உயிர்வேட் டொருவன் மொழிந்தவெலாம்
நன்மைக்கே என்றுநீ நம்பு. 244

பொட்டில்லை பூவுமில்லை பொன்னணிகள் ஏதுமில்லை
மட்டுப் படுவதுண்டோ மானழகு — தட்டுநிறை
உண்பண்டம் கண்ணெதிரே உள்ளம் விழையாதா
உண்ணற் கிசைக உவந்து. 245.

வண்டுபடா நாண்மலரின் வாழ்வும் ஒருவாழ்வா
கண்டறிக வாழ்வின் கவினழகை — விண்டுரைக்கல்
இல்லா விழுமின்பம் இவ்விளமை ஈந்துவக்கும்
நல்லாறு நாடல்நீ நன்று. 246

வாழ்வின் பொருளுணர்ந்தால் வாளாய் அமர்ந்துமிராய்
வாழ்விற் கெதிர்ச்சொல்லே தாழ்வாகும் — கீழ்மை
மரபென்று சொல்லியிங்கு மாதர்க்கு வேண்டா
உரமிட்டார் தீமை உரைத்து. 247

**பெண்ணிறந்தால் மீண்டணைவர் பேணார் மகளிரினை**
**மண்ணவரோ காட்டார் மணம்**

கொண்டோன் இறந்துபடின் கொண்டிடுக கைமையெனும்
கொண்டோள் இறந்திடினோ கூறாதே — கொண்டாய்க
ஆண்டாண்டாய்ப் பெண்ணினத்தை ஆண்டுவரு ஆணினந்தான்
வேண்டா விளைவித்த வெப்பு. 248

எல்லாம் அறிந்திருந்தும் ஏற்பேன் உனையென்பான்
பொல்லான் அவனெனினும் நல்லோனே — சொல்லக்கேள்
இப்படியே உட்குமைந் திருப்ப தியற்கையிலை
தப்பாம் தனிமைத் தவிப்பு. 249

நம்மை மதிப்பாரை நாம்மதித்தல் நற்பண்பாம்
தம்மின் தமைவேட்பார் அன்புடைமை — அம்மம்மா
உன்னை உளங்கொண்டான் உள்ளன்பை உன்னுகையில்
இன்னல் இரியாதோ எண். 250

**கள்ளேய் கவின்காதல் கைமையேன் காணுவதோ**
**உள்ளேன் உயர்குடிக் கூறு.**

சொல்லி முகம்பார்த்த தோழி தனைநோக்கி
வல்லைக் கொடியெழிலி வாயசைத்தாள் — அல்லி
எனைத்தானும் நல்லவையே எண்ணிடுக இன்குடிக்குத்
தினைத்தானும் செய்திடேன் தீங்கு. 251

மனைவி இறந்தவுடன் மற்றொருத்தி தேடல்
வினையென்ப ஆடவர்க்கு வேண்டேன் — நினைவகத்தே
நின்று நிலைமுன்னர் நீங்கி மறைந்தாரை
இன்றகற்றல் ஆகும் எளிது. 252

எண்ணாத எண்ணியிங் கேற்கேன் ஒருமுடிபும்
உண்ணா முலைப்பாலே உள்ளிளமை — உண்ணோவேன்
கட்டி எனைமணந்தார் கட்டின நாளன்றே
வெட்டினார் வெட்டுண்டார் வீழ்ந்து. 253

**பாலுறு நீராய்ப் படர்ந்திடு பாலுணர்வு**
**கோலுமே நன்னெஞ்சைக் கொண்டு.**

(கோலுதல் = சூழ்தல், வளைத்தல்.)

இந்த அகவைதனில் யார்க்கும் எழுகின்ற
அந்த உணர்வனைத்தும் ஆட்டுவிப்ப — நொந்தென்ன
கட்டி அணைத்தடையும் கட்டிலா இன்பமெலாம்
ஒட்ட உடல்தேடும் உள். 254

சொல்வேன் மனந்திறந்து தோழி உனக்கனைத்தும்
வெல்லேன் உடற்கூட்டு வெம்பசியை — எல்லே
பசிவரின் பத்தும் பறக்குமென்றார் என்னைப்
புசித்திடுங் காமம் புடைத்து. 255

என்னினைவில் எல்லாரும் என்னால் இடர்ப்படுவர்
உன்னிலையும் அன்னதுவே உன்னேனோ — இன்னட்(கு)
உறையுளாய் இங்கிருந் துற்றபயன் என்ன
சிறையுறை வாழ்வே சிறப்பு. 256

அன்னைதந்தை மாமனத்தை அத்தனைசொந் தங்களும்
என்னை மறுமணத்திற் கேவிடுவர் — அன்னவர்தாம்
உள்ளமெழு பேரன்பால் ஊக்கிடுவார் உண்டாமோ
கள்ளமிலார் நேயங் கருது. 257

**ஐம்புல ஆசைக் கலைபவரே ஆயிடினும்**
**கைம்பெண்ணைக் கைப்பிடியார் காண்.**

எச்சில் உணவுண்ண எத்தனைபேர் முன்வருவர்
பிச்சை எடுப்போனும் பின்னடைவான் — மெச்சிமிக
இச்சை மொழிப்பேசி இன்றினிப்பார் ஏசாரோ
கொச்சைப் படுத்திப்பின் கூறு. 258

**எல்லையிலா விண்வெளியாய் எண்ணம் விரிந்தலையும்**
**நல்லதில்லை செல்வோம் நட.**

ஊரார் உரைபழிக் கொவ்வா துளமயங்கும்
தீராப் பழிக்குத் தெருவமைப்பாய் — வாராய்
இறைவன் திருக்கோயில் ஏகவெழும் இன்பம்
குறையும் குழப்பம் குலைந்து. 259

கேட்டல்லி நெஞ்சிருத்திக் கிள்ளை மொழியெழிலி
வாட்டம் முழுதுணர்ந்து வாயிழந்தாள் — கோட்டமில்
பாட்டருமை கற்ற படிப்பாளி தானறிவார்
காட்டெருமை காணல் கடிது. 260

# 13. வேண்டி இரப்பான் விழைந்து

எல்லாம் அவளன்றி ஏதுமிலை வாழ்விலென்று
சொல்லால் விளக்கற்குச் சூழ்ந்த செழியனுரை
உள்ளத்து வாங்கி உலகமுறை ஆய்ந்தெழிலி
கொள்ளற் கிடையூறு கோடி இருப்பதையும்
வேண்டின் மணக்கவென்றும் வேண்டாவே காதலென்றும்
ஆண்டுரைத்துப் போனாள் அகம்.

**தேடி இருந்தானின் தேவை தெரிந்தார்போற்**
**கூடினர் ஆண்டான் குடி.**

கோவிற் புறச்சுற்றில் கோவேந்தன் பேருடையான்
ஆவல் அடக்கி அமர்ந்திருந்தான் — நோவுற்ற
எண்ணம் இடையறா தெங்கும் இயங்கிட்டும்
உண்ணின்றாள் பெண்ணாள் உயர்ந்து. *261*

ஆடா தசையா தமைவாய் அமர்ந்தெதையும்
நாடா நலிசெழியன் நாட்டத்தில் — வாடா
மலரனையர் வந்து மகிழ்வூட்டி மாறா
நலமளித்தார் நன்னோக்கை நட்டு. *262*

பட்ட மரந்துளிர்க்கப் பார்த்த எழில்மகிழ்ந்தாள்
கிட்டற் கரிதன்றோ கெட்டார்க்கு — மட்டுமிக
உண்டான் எனவுவகை உற்று மகிழ்ந்தானைக்
கண்டார் களித்தார் கலந்து. *263*

**வந்தவரைக் கண்டுவந்து வாழ்க்கை வளம்வேண்டிச்**
**செந்தளிராள் கைவேட்டான் சேய்.**

உங்கள் வருகைக்காய் ஒவ்வொரு நாளுமிங்குத்
தங்கியருள் வேண்டித் தவங்கிடந்தேன் — கங்குலில்
மின்னல் எனத்தோன்றி மேன்மை அளித்திட்டீர்
இன்னலெனைத் தீண்டா தினி. *264*

சற்றிரு வீரும் தயங்காத தமர்ந்திடுக
இற்றைக் கெனக்கமைந்த தின்னாளே — சிற்றளவும்
குற்றங் குறைவேதும் கொண்டேனில் உம்வரவால்
இற்ற துயரனைத்தும் இன்று. *265*

உள்ளத் துறைபவற்றை ஒன்றும் ஒளித்தலின்றித்
தெள்ளத் தெரிந்துரைப்பேன் தேர்ந்திடுக — துள்ளிக்
குதித்தோடு கோடைக் குளிர்புனலீர் கொஞ்சம்
மதித்தென்சொல் ஆய்க மனத்து. 266

எண்ணம்போல் வாழ்வென்பார் எண்ணங்கீழ்ப் பட்டதனால்
பண்பிலா பண்ணிப் பழிப்புற்றேன் — விண்ணலைவெண்
மேகமென எங்கெங்கோ வீணாய் மிதந்திழிந்தேன்
வேகுமுளம் மேவும் வெறுப்பு. 267

இருட்டில் இருந்ததனால் ஏதும்முன் காணேன்
உருக்கண்டேன் ஓவியமே உன்னால் — விருப்புணர்ந்(து)
என்னை மணந்துகொள ஏற்பேன் எனவுரைப்பின்
இன்னே தொடங்கிடுவேன் ஏற்பு. 268

**எழிலிதனை வேட்பின் இயையுமனக் காழ்ப்பு**
**விழுமியதோ ஆய்க விருப்பு.**

அமர்ந்து செழியனுரை ஆய்ந்தறிந்த அல்லி
நிமிர்ந்தவனைப் பார்த்தாள் நெகிழ்ந்தாள் — அமிழ்தே
உதிர்த்தவைதாம் ஆயின் உமைப்பெற்றோர் உற்றோர்
எதிர்த்தாலென் செய்வீர் எடுத்து. 269

கைம்பெண் எழிலறிவீர் காணீர் எழுவிளைவை
ஐம்புல ஆட்சியினால் ஆர்ப்பரிப்பீர் — பொய்மை
உடற்செழிப்பை வேட்டிங் உரைத்தவையாம் என்னில்
நடந்திடுக வேண்டாவும் நட்பு. 270

எழிலி உயிரிணையாள் ஏமாற்றம் மீண்டும்
எழலிலா வாழ்வியலின் ஏற்பே — விழுமியதே
நாளும் உமைநத்தி நன்மை விளைத்திடுவாள்
கோளுங் குறுக்கிடா கொள். 271

(நத்தி = விரும்பி)

முன்னரே வண்டிருந்து மொய்த்த மலரென்றோர்
உன்னிடத்துத் தாக்கம் உளதாயின் — சென்றோர்க
ஒன்றினில் ஒன்றொன்றும் ஒப்பிலா இல்லறத்தில்
தென்றலும் ஊடுறுதல் தீது. 272

**உள்ளம் நிறையுணர்வை ஒவ்வா தெனலுயர்வோ**
**உள்ளுவ தெல்லாம் உயர்வு.**

பேசான் விடையளியான் பெண்களையே பார்த்திருக்கக்
கூசான் குறித்துப்பின் கூறிடுவான் — மாசாகாப்
பொன்னை மணியைப் புகரிலா நன்முத்தைத்
தன்னுயிராய்த் தாங்கினான் தான். 273

எழிலி அழகென்னை ஈர்த்ததுதான் உண்மை
அழலின் மெழுகானேன் ஆம்ஆம் — எழிலறிவார்
கண்ட பொழுதிருந்து கண்டேனில் நல்லுறக்கம்
விண்டுரைத்தல் வேண்டாவே வீண். 274

ஆடை அணிகலன்கள் அன்றாடம் மாற்றலென
ஓடைக் கயலொப்பார் ஒத்திருந்தார் — காடை
குருவியல பெண்கள் குறையிரப்பேன் கொண்ட
மருவு பெண்ணாசை மறந்து. 275

உள்ளத்தில் கள்ளமிலை உள்ளதெலாம் சொல்வதெனின்
கள்ளியுன் தோழி கவினினைப்பே — எள்ளற்க
கொண்டான் உடற்சூட்டைக் கொஞ்சமுங் கொண்டறியார்
அண்டாவே ஐயம் அறி. 276

கன்னியிலை என்றாலும் காணேன் குறையேதும்
என்னை எழிலேற்றால் ஏற்றேனோ — முன்னைக்
குறையேதும் இல்லாக் குணத்தினால் அன்றோ
நிறைவார் அகத்துள் நிலைத்து. 277

ஏற்றேன் எனவெழிலி இன்னும் இதழ்விரித்துச்
சாற்றார் எனினுமென் சார்ந்ததனால் — போற்றேனோ
அல்லி அகன்றிருக்க ஐயம் அகற்றற்குச்
சொல்லச் சிலவுண்டு சூழ்ந்து. 278

**காணாதான் கண்டனெனக் காதலிற் காண்பனெனின்**
**நாணாளோ தன்னுள் நயந்து.**

சென்றாளைப் பின்தொடர்ந்த சேல்விழியாள் தண்முகத்தைத்
தின்றானைக் காணத் திரும்பியவள் — என்றோமுன்
உண்டான் எனவாரி உண்பானின் தன்னழகைக்
கொண்டானைக் கண்டாள் குழைந்து. 279

வைத்த விழியிரண்டும் வாட்டம் சிறிதுமின்றித்
தைத்த தளிருடலைத் தாங்குவளோ — கைத்ததுவே
கள்ளம் இலானிவனோ காமருஞ் சீருடலில்
உள்ளமிழந் தானென் உழன்று. 280

**அல்லி அகன்றவுடன் ஆழ்மனத்துக் காதற்குச்**
**சொல்லில் அமைப்பான் சுவை.**

காதல் பிறக்குமிடம் கண்களல கட்டுடலே
நோதல் தவிர்த்திடுக நுண்ணிடையாய் — ஏதாய்
உணர்வுக் குரமூட்டும் உன்னெழிற்கு முன்னர்
இணரெரி தீயோ இணை. 281

உள்ளதை உள்ளபடி ஒன்றும் ஒளித்தலின்றிப்
பிள்ளை குணத்தினனாய்ப் பேசிடுவேன் — உள்ளிடுக
பள்ளியறைக் கென்றே படைத்தனரோ உன்னையெனத்
துள்ளெழில் கொண்டாய் துளிர்த்து. 282

ஆவல் உடலிடத் தாயினுயிர் உள்ளிடத்(து)
ஏவல் எஃதெனினும் ஏற்றிடுவேன் — கோவில்
இறைவன் கரியாக இன்றிருந்தெந் நாளும்
குறையெதையுங் கொள்ளேன்நான் கொள். 283

பாலிற் சுவையாய்ப் பனியில் குளிர்ப்பண்பாய்
ஆலின் விழுதுமாய் ஆனாய்நீ — மேலில்லாய்
ஏற்பின் உயிர்பிழைப்பேன் என்றும் மகிழ்ந்திருப்பேன்
காற்றில் மிதப்பேன் கரைந்து. 284

சோற்றைத் திணித்தமைத்த சொத்தையுடற் பிண்டமென்றும்
காற்றடைத்த பையென்றும் கண்டுரைத்தார் — போற்றுவர்யார்
பெற்ற பெருவாழ்வில் பேரின்பம் பேணலல்லால்
மற்றவற்றால் கொள்வதெல்லாம் மால். 285

சொல்க உளநினைப்பைச் சோர்வெதற்கு நீயுரைக்கத்
தொல்லையெலாம் போகச் சுவைபெருகும் — முல்லை
சிரித்ததென மெல்லச் சிணுங்கிடுவாள் தன்னை
விரித்துரைக்க என்றான் விதந்து. 286

**கொல்பகையும் இல்லுறவுங் கொண்டாளைத் தங்குடிக்கு**
**இல்லாளாய்க் கொள்வாரோ இங்கு.**

தாலி இழந்தாளைத் தன்னுரிமைப் பெண்டாக்க
வேலி அமைத்தற்கே வேண்டிடுவீர் — சாலுவதோ
கற்ற ஒருமகனும் கைம்பெண்ணைக் கைப்பிடிக்கப்
பெற்றவரும் கொள்வாரோ பெட்பு. 287

(பெட்பு = பெருமை, பேணுகை, விருப்பம்)

ஒப்பிடினும் உற்றார் உறவினர் ஊராரும்
தப்பென் றுரைத்துத் தடுத்திடுவர் — அப்படித்தான்
குற்றங் குறைபலவுங் கூட்டிடுவர் குன்றெனவே
நிற்றலும்மால் ஆமோ நிமிர்ந்து. 288

நின்றிடுவீர் இன்றெனினும் நெஞ்சு தளர்ந்தொருநாள்
குன்றற் கியன்றனவுங் கூடிடலாம் — அன்றைக்(கு)
இரண்டா மவளிவளை ஏனேற்றோம் எண்ணின்
இருட்டான் ஒளிபின்னர் இல். 289

பட்டதைச் சொல்லென்றீர் பட்டென்றே சொல்லிடுவேன்
கட்டுள் அடங்கலிலாக் கன்றனையீர் — எட்டுணையும்
உங்களையான் ஏற்றற் குறுத்தல் எதுவுமில்லை
தங்குதடை உண்டுபல தாம். 290

இல்லை உறவெனினும் உண்டுபகை நம்மிடையே
சொல்லால் விளக்கிடவோ சூழ்நிலையை — எல்லாரும்
தெள்ளத் தெளிந்தறிவர் தேறுமோ நம்முறவு
கள்ளமிலை என்னுரையில் காண். 291

என்னவர் உங்கட் கியைந்தவொரு சிற்றப்பன்
தன்மகனைக் கொன்று தவறிழைத்தார் — உன்னுறவோர்
கொன்றாரைக் கொன்று கொலைவெறியைத் தாம்தணிந்தார்
ஒன்றாவே நம்முள் உறவு. 292

பழிக்குப் பழியென்ற பண்பாட்டில் வாழ்வோர்
வழிக்கு மரபெனவே வந்தோம் — இழுக்கதுவே
வாழ ஒருங்கிணைந்து வாய்ப்புண்டோ ஆய்ந்துரைக்க
வீழுமோ கொண்ட வெறுப்பு. 293

பிள்ளை நலம்விழைந்து பெற்றோர் ஒருப்படினும்
கொள்ளார் கிளைஞர் குழப்பிடுவர் — உள்ளா
அழுக்கா றடுத்த கிளைகாய்க்கின் ஆகா
விழுப்பமிம் மாந்தர்க்கு வீண். 294

**கள்ளேய் உயர்காதல் காணின் துயர்கூடும்**
**உள்ளேன் ஒருபோதும் உன்.**

எல்லாம் உணர்ந்ததனால் என்மனதில் எள்ளளவும்
இல்லை உயர்காதல் இன்னினைப்பும் — தொல்லையிலை
மீண்டும் மணமமையின் மேலென்பேன் வேட்டிடுவேன்
வேண்டும் நிலத்தில் விளைவு. 295

எச்சில் இலைச்சோற்றுக் கேங்கி இளைத்திடுவார்
நச்சிப் பயனென்ன நல்லுணவை — அச்சமளி
உச்சி மலைத்தேனை மெச்சி உழல்வதினும்
மிச்சப் பழங்கஞ்சி மேல். 296

காதல் உளங்கொண்டுங் காணேன் மணமென்றால்
சாதல் ஒருவழியே சார்ந்தமையும் — ஆதலினால்
என்வரினும் என்வரையில் இன்காதல் நன்மணமுன்
ஒன்றா துளத்தில் உணர். 297

வேண்டா நினைவுகளால் வேதனை கொள்வதினும்
தூண்டா மணிவிளக்காய்ச் சோர்ந்திருப்பேன் — தீண்டா
மலரொப்ப வாழ்ந்து மடிவதலால் வாழேன்
அலரரும்பக் காதல் அழிந்து. 298

உங்கட் கெதுநலமோ உற்றாய்ந்து மேற்கொள்க
இங்குதவிக் கென்னால் எதுவுமில்லை — பொங்குகடல்
வெள்ளியென வாய்த்தீர் விளக்கெதற்காம் வேண்டுவற்றைக்
கொள்க உரைத்தவை கொண்டு. 299

இப்போ தகன்றிடுவேன் என்னை இனித்தனித்(து)
ஒப்பேன்நீர் சந்தித் துரையாடத் — தப்பதுதான்
உற்றார் உறவினர் ஊரார் ஒருங்குவர
உற்றால் உறலாம் உரை. 300

**காதற் கிடமில்லை கைக்கா மறுமணமே**
**ஆதல் இயைக அறிந்து.**

கூறிக் குனிந்ததலை கொஞ்சமும் ஏற்றமின்றி
நாறுமலர் அன்னாள் நடந்திட்டாள் — வேறெதையும்
தேர்ந்தறிய ஆற்றாச் செழியன் இறுதியவள்
நேர்ந்த பொருளாய்வான் நீடு. 301

# 14. உள்ளுவாள் உள்ளத் தொளிவு

என்ன நடந்த தெழிலி செழியனிடை
ஒன்றும் உரையாளே ஊறும் நிகழ்ந்ததுவோ
அல்லி வினவிடவும் ஆற்றா எழிலியவண்
சுல்லென் றெரித்தாள் சுட்டு.

**உன்னோன் உரைத்த உரையென் உரைசெய்ய**
**இன்னாள் எனவெடித்தாள் என்**

பேசா மடந்தையெனப் பேசுமெழிற் பேருருவாள்
கூசா ஒளிவிளக்காய்க் கூடவர — வீசா
வளியசைவும் காதடைய வாட்டமுறு அல்லி
களியடையாள் உள்ளங் கசந்து. 302

என்ன நடந்ததங்கும் ஏனமைதி கொண்டிடுவாய்
கன்னல் மொழிகேட்கக் காத்துள்ளேன் — உன்னவர்தான்
செய்ய உளவற்றைச் செப்பின் உளமகிழும்
ஐயன் உரைத்த அறை. 303

சுடுகலனில் பட்டொலி சொட்டுநீர் ஒப்பக்
கடுகடுத்த சொல்லைக் கனியாள் — அடுத்துவந்த
அல்லியுளந் துன்பம் அடையும் எனவறிந்தும்
வில்லம்பாய் எய்தாள் விரைந்து. 304

யாரவன் என்னவனா என்நீ உலறுகிறாய்
வேரருந்த பூங்கொடி வீயரும்(பு) — ஊரில்நான்
காய்ந்துலர்ந்த கன்னல் கடும்பகலிற் காய்நிலவு
தோய்ந்தினிக்க உள்ளாரார் சொல். 305

( வீ = சா)

யாரவன் எப்படி எல்லாம் அறிவோமே
சேரிடம் தேறானாய்ச் சேர்ந்துள்ளான் — ஊரில்
பொழிநீர் புரண்டு பொதுக்குளத்தில் சேர்ந்து
விழலொப்ப வீழ்ந்தான் விழல். 306

**உள்ளேன்நான் காதலினை ஊரார் உறவினர்முன்**
**கொள்வாரே கொளர்க்குரியர் கொள்.**

கண்டவுடன் காதல் கருதில் கறையாகும்
உண்டவுடன் நஞ்சும் உறுத்தலுண்டோ — வண்டுமனம்
கொண்டலையும் ஆண்கள் கொலைஞரினும் மீக்கொடியர்
அண்டிடார் யாரும் அகம். 307

இன்றுவரை என்மனத்தில் யாரும் இருந்ததில்லை
நின்றிருந்து நீங்க நிழல்மரமோ — மன்றறிய
கொட்டுக் குரலோடு கொள்பவரே கொண்டிடுவார்
ஒட்டுமுடல் உள்ளம் ஒருங்கு. 308

( குரல் — இன்னிசை, ஒலி. )

காதலிப்பார் விட்டிடுவார் கைபிடிப்பார் தொட்டணைவார்
வேதனையோ புற்றாய் விளைந்தழிக்கும் — தீதறிவேன்
எல்லாம் அறிந்திருந்தும் ஏற்பேனோ காதலென்றாள்
நல்லாளல் லிக்கு நயந்து. 309

# 15. நல்லதற்கோ காதல் நவில்

இன்னார் இனியரல இல்லார் இருப்பரல
ஒன்னார் உறவார் உயர்ந்தார் இழிந்தார்க்கும்
எல்லார்க்கும் ஒத்ததுவே இன்காதல் இற்றிடுமோ
பொல்லான் பொறுப்புமிலான் போற்றா புரிசெழியன்
வேண்டார் இடத்து விளைதேனை வேட்டதனால்
பெற்ற அருதந்தை பேணார் பழித்துரைக்க
உற்ற தமிழாசான் ஒன்றிணைந்து சிற்றப்பன்
கண்ணாள் எழிலிக் கவினை எடுத்துரைத்த
பண்பால் இசைந்தார் பகுத்து.

**தந்தை தனக்காகத் தாளா வெகுளியொடு**
**நொந்திருக்கக் கொண்டான் நொசிவு.**

எங்கெங்கோ தேடிப்பின் இல்லையென்றான் என்பிள்ளை
எங்கிருந்தாய் நீயும் இளஞ்செழியா — இங்கேயென்
அண்ணன் அமர்ந்தயர்ந் தாற்றார் உனைக்காண
எண்ணுவ தெல்லாம் இடர். 310

சீற்றம் மிகவுடையர் செல்கநீ தண்மையுடன்
ஆற்றும் வழிகண் டடங்கிடுக — மாற்றறிதோ
உள்ளார் உயிர்நண்பர் உற்றதமிழ் ஆசிரியர்
கொள்ளார் சினம்நிலையாய்க் கொள். 311

சிற்றப்பன் பிள்ளையுடன் சேர்ந்த செழியனைமுன்
பெற்றப்பன் பார்த்தார் பிழையுணர்ந்தார் — கற்றுணர்ந்த
நண்பர் நலங்கிள்ளி நற்றுணையாய் வீற்றிருக்கக்
கண்களெதிர் காட்டா கடுப்பு. 312

வாடாவா வந்தமர்க வந்த பொழுதிருந்து
தேடா இடமெல்லாம் தேடியும் — கூடாய்
அறிஞர் இவரென்றன் ஆதிமுதல் நண்பர்
அறிக வணங்கி அமர். 313

அருகிருந்தார் எல்லாரும் ஆர்த்தலைந்த நெஞ்சை
ஒருநிலையில் சேர்ந்தியைக்க ஓரான் — பொருளறியா
மாணாக்கன் ஒப்ப மருண்ட விழியினனாய்க்
காணான்தன் தந்தை கருத்து. 314

**பெற்ற மகனிலைக்குப் பேதுற்ற நெஞ்சினராய்**
**உற்றதெலாம் சொல்வார் உலைந்து.**

இங்கேன் அனுப்பியதும் ஏனுன்னை நீங்கியதும்
அங்கே நடந்த அகமிலையோ — இங்கேயும்
உன்றன் விளையாட்டுக் கோய்விலையா உள்ளாயோ
நன்றன்றே நங்கையர்தம் நட்பு. *315*

எல்லாம் விளக்கி இயைந்திட்ட உன்கடிதம்
சொல்லாமல் சொல்லியதுன் தொன்னிலையைப் — பொல்லாப்
பழக்கம் உனைத்தொடர்ந்து பற்றியதால் அன்றோ
வழுக்கினாய் காதல் வயம். *316*

பெற்ற தொருமகனைப் பேதுற் றழுதிடுவாள்
உற்ற மகனிலைக் குண்மையதே — பற்றதுதான்
ஈன்ற பொழுதின் இயைந்த உடற்றுயரின்
தோன்றுமிக உள்ளத் துயர். *317*

வேண்டார் தொடர்புன்னை விட்டிடல் நல்லதென்(று)
ஈண்டேவி விட்டிட்டேன் எல்லாம்வீண் — மீண்டாயில்
செய்தவற்றை விட்டகலாச் செய்கை தொடருமெனில்
உய்தலில் வாழ்வில் உயர்ந்து. *318*

பெண்ணெழிலார் பின்னலையும் பேதைமை தீயதன்றோ
எண்ணம் பிறழாமை இன்னிலையே — பண்புமதாம்
கற்றமைந்த நண்ப கறைபட்ட என்மகற்குச்
சொற்றுணையாய் நல்லவற்றைச் சொல். *319*

**சொல்லாற் சுவையூட்டுஞ் சொற்றுணைவர் கற்றறிந்த**
**நல்லா றுரைப்பார் நயந்து.**

கற்றதைக் கற்றபடி கற்பித் ததற்கேற்ப
நிற்றிரு நேர்மை நிலைதவறார் — பற்றிகந்தார்
நல்ல தமிழாசான் நலங்கிள்ளி சாற்றிடுவார்
ஒல்லும் வழியெல்லாம் ஓர்ந்து. *320*

தக்க பருவத்துத் தாய்தந்தை சுற்றமதன்
பக்கமுறா புள்ளினமும் பல்லுயிரும் — ஒக்கதுவே
மாந்தர் இடைமட்டே மாறா திரும்பிள்ளை
சாந்துணையும் பெற்றோரைச் சார்ந்து. *321*

தோழன் எனவுரைப்பார் தோட்கு வளர்பிள்ளை
வாழும் வழிமுறையின் வாய்மையது — கோழியினான்
அப்பனுக்குப் பாடமன்று தப்பா துரைத்தானின்
செப்பம் செறிந்தாரே இன்று. *322*

பெற்றோர் பெரியோர் பிறரெல்லாம் தம்மைவிடக்
கற்றோர் எனக்கொள்ளாக் காலமிது — சற்றேனும்
தம்பி எனைத்தாங்கள் தக்கோன் எனக்கொள்ளின்
நம்பிடுக நானுரைப்ப நன்று. 323

எவ்வழியில் எப்பொருளை யாரெடுத்துக் கூறிடினும்
செவ்வியர் ஆய்ந்தறிந்து சேர்ந்திடுவர் — அவ்விய
நெஞ்சத்தார் ஆக்கமென நில்லா தழிவுதரு
வஞ்சமிகு நெஞ்சினர் வாழ்வு. 324

(அவ்வியம் = அழுக்காறு, பொறாமை.)

நில்லா இளமையிது நிற்கா புலனைமைந்(து)
ஒல்லாச் செயற்கிங் குரமூட்டும் — எல்லாமுங்
கற்றாரும் பாழாம் களிமயக்கில் ஆழவுமைப்
பற்றாதோ காமம் படிந்து. 325

ஆவ தழிவதெலாம் ஆகும் அணுத்திறனால்
நோவதும் வீணன்றோ நுண்திரனை — ஏவிடுவார்
எண்ண இயல்பிற் கியங்கும் அணுவனைய
நுண்ணிடையர் கண்காட்டு நோக்கு. 326

வெள்ளம் புதுவதெனின் வேண்டியணை மீனினந்தான்
கள்ள நினைவுடைய காரிகையர் — எள்ளிடுக
நில்லாப் பொருளுடையன் நின்னின் ஒருவனெனின்
நில்லாருன் னோடு நெடிது. 327

வெய்யோன் எழுவொளியில் விண்மீன்கள் தோன்றலிலை
பொய்யோர் உறவுமதே போக்கிடுக — ஐயாகேள்
நெஞ்சு களமாக நீட்போர் நிகழ்த்திடுவார்
நஞ்சினும் மீக்கொடியர் நம்பு. 328

கெட்டுப் பிணிபட்டுக் கீழ்மை பலவுற்றும்
பட்டுந் திருந்தீர் பயனென்ன — விட்டிடுக
கற்றுத் தெளிந்துண்மை முற்றத் தெரிந்தவர்கள்
பற்றுவரோ பெண்ணினத்தார் பற்று. 329

காசுக் கணைவரிடம் காதலிரா காமமிரும்
ஆசையளி பெண்ணழகும் அப்படியே — மாசை
விலைகொடுத்தி யார்பெறுவர் வேண்டாபெண் ஆசை
இலையிணையாய் வேறோர் இடர். 330

உற்றார் துயரென்றால் ஓடி உயிர்கொடுப்பார்
பெற்றோர் அலாது பிறருண்டோ — சற்றோர்க
பிள்ளைநலம் ஒன்றே பெரிதாய் நினைபெற்றோர்
உள்ளுவரோ ஓரணுவும் ஊறு. 331

தந்தைதரு சொல்மிக்க தந்திரமோ மந்திரமோ
முந்தையருங் கண்டு மொழிந்ததில்லை — விந்தையதோ
ஊனாய் உணர்வாய் உயிராய் உறைமகற்(கு)
ஏனோ எனமொழியார் எண். 332

பெற்றோர் இவரென்ற பேறே பெரும்பேறாய்
மற்றேதும் வேண்டார் மனமென்னே — உற்றாய்க
ஊன்று விதையனைத்தும் ஒல்காப் பயனளிக்கும்
ஈன்றோர்க்கு நாமளிப்ப தென். 333

நட்டுப் பயனளிக்கும் நன்மரங்கள் மக்களென்றா
கட்டி அணைத்துக் களிகொள்வார் — எட்டியெனக்
கைப்பின் கலைந்திடுவார் காத்திடுவார் வீணரையும்
வைப்பெனவே வாழ்நாளும் வைத்து. 334

இருளும் ஒளியும் இராவோர் இடத்து
மருளும் அறிவுமதே மாறா — தெருளற
எண்ணுக எண்ணியாங் கெய்தற் கியைந்தபடி
திண்ணியராய் நின்றிடுக தேர்ந்து. 335

**ஆசிரியர் சொன்மொழிகள் அத்தனையும் உள்வாங்கிப்**
**பேசிடுவான் நொஞ்சைப் பிழிந்து.**

அன்புடையீர் உங்கள் அறிவுரைகள் அத்தனையும்
பொன்னைப் புடம்போடும் பொற்பாகும் — என்னையான்
தூக்கிப் படிந்துள்ள தூசுகளைத் தட்டியுள்
நோக்க வழியமைத்த நூல். 336

நல்ல வழியறியா நண்பருடன் சேர்ந்ததனால்
சொல்லற் கியலாத சூழ்ந்திளைத்தேன் — தொல்லையதால்
உள்ளும் புறமும் ஒருங்குநோய்ப் பற்றியதால்
எள்ளற் கிடமானேன் யான். 337

கற்கக் கசடறக் கற்காக் கரணியத்தால்
ஒற்கத்தில் நிற்கும் உருப்பெற்றேன் — பற்களிடைச்
சிக்கி இருந்தழுகிச் சீரழிக்கும் மிச்சிலெனத்
துக்கம் இழைத்தேன் தொடர்ந்து. 338
(ஒற்கம் — தளர்ச்சி, வறுமை; மிச்சில் — எஞ்சு பொருள்.)

கண்ணில் விரல்பட்டால் காக்கக் கருதலலால்
எண்ணல் விரலொறுக்க இல்லையன்றோ — மண்ணின்
இயற்கை எழிற்குலுங்கும் இவ்வூர்யான் சேர
உயர்ந்திட்டேன் நெஞ்சுள் உணர்ந்து. 339

மூன்றிரு திங்கள் முடிந்தன இவ்வூரில்
தோன்றலில் தொல்லுணர்வும் தொல்லையிலை — ஆன்ற
அருநண்பன் கண்ணன் அருகுள்ளான் சொல்வான்
இருளகத் தண்டா தினி. 340

ஒளியும் இருளும் ஒருங்கிணையா உண்மை
ஒளியும் இருளொளியில் உன்னின் — ஒளியும்
இருளில் ஒளிவதுண்டோ இன்காதல் நெஞ்சில்
இருளகன் றோடும் இரிந்து. 341
(இரிந்து — அஞ்சி, விலகி.)

குற்றமெனக் காதலித்தல் கொண்டனரா நம்முன்னோர்
பற்றிகந்து பாடினரா பாவலரும் — நற்றமிழர்
சங்கத் தமிழ்ப்பாடல் சாற்றும் பொருளிலெலாம்
பொங்குவதோ காதற் புகழ். 342

செய்யாத செய்ததனால் சேர்ந்தேன் சிறுமையினை
மெய்யாய் மனந்திருந்தி மீண்டிட்டேன் — கொய்யா
மலரனையாள் என்னகத்தில் மாற்றத்தைத் தோற்ற
இலவினியென் வாழ்வில் இழிவு. 343
(தோற்ற — உண்டாக்க.)

கெட்டலைந் தாடிடுவார் கொட்டம் அடங்கக்கால்
கட்டிடவே பெண்ணொருத்தி கட்டிவைப்பர் — பட்டறிந்தார்
சொன்னமொழி உண்மையெனில் சொந்தமென உள்ளமுறை
என்னவளைச் சேர்த்தலன்றோ ஏற்பு. 344

**செழியன் உரையிருந்த செவ்விதமை ஆய்ந்தார்**
**பழுதுபட எண்ணார் படர்ந்து.**

உள்ளத்தில் கள்ளமிலா உண்மை ஒலியுரையும்
பள்ளம் படுநீராய்ப் பாய்ந்ததுவே — கொள்ளக்
குறையாப் பகுத்தறிவைக் கொண்டதமிழ் ஆசான்
அறைவாரோ புன்மை அடுத்து. 345

சொல்ல நினைப்பவற்றைத் தொல்லைதனைச் சூழ்ந்திடினும்
நல்லமுறை நாட்ட நடுங்காதார் — மெல்ல
அருகிருந்தார் உள்ளம் அமைதியுற அன்பாய்க்
கருதிய உரைப்பார் கனிந்து. 346

**பிள்ளை விருப்பிற்குப் பெற்றோர் ஒருப்படலே**
**கள்ளங் கரைக்கும் கலை.**

கட்டறுந்த காளைசுற்றிக் கொட்டடிக்கு மீளலொப்ப
விட்டுக் குறையனைத்தும் மீண்டிட்டார் — பட்ட
மரந்துளிர்க்கும் வேரில் மழைசேரின் ஓரின்
உரஞ்சேர்க்கும் காதல் உயிர்க்கு. 347

அன்பின் வழிய துயிர்நிலை ஆரறியார்
அன்புற் றமைந்த தருங்காதல் — நன்றறிவார்
குன்றைப் பிளக்குங் குறுவிதைக் காதலினை
என்றும் இடறார் இகழ்ந்து. 348

**இனியதுவே காதல் இளஞ்செழியன் காதல்**
**கனியன்று கைத்திடு காய்.**

இடையில் குறிக்கிடலை ஏற்றிடுக நண்ப
உடையில் கறையோ ஒதுக்கத் — தடையொன்றும்
இல்லையுயர் காதற் கிளஞ்செழியன் கொள்காதல்
நல்லதில்லை நான்சொல்வேன் நம்பு. 349

மாற்றமென் மைந்தன் மனத்தில் மலர்ந்ததிலே
ஊற்றம் உவகை உளத்துள்ள — ஏற்றிடவோ
ஒன்னார் குடும்பத் துதித்த ஒருமலரைத்
துன்னேன் பகைவர் தொடர்பு. 350

**கைத்திடினுங் காயாய்க் கனியாய் இனித்திடுமே**
**மெய்த்த அறிந்திடல் மேல்.**

நண்பர் இடையே நவின்ற மொழிநெஞ்சில்
எண்ணியுளஞ் சோரா இயலாசான் — பண்புடையார்
எல்லாரும் ஆங்கே எனவறிந்த பான்மையினால்
சொல்வார் நினைத்த தொடர்ந்து. 351

நல்ல உளமுடைய நண்பரும் பக்கத்தில்
அல்லதெதும் என்றும் அருகடையா — செல்லும்
வழியனைத்தும் சேரும் செழுமையலால் வாரா
பழியென்றும் வாழ்வில் பகைத்து. 352

காற்றின்றி யாருய்வார் காதலும் அப்படித்தான்
ஊற்றைக் குழியுடற் கூற்றமது — போற்றுமியல்
தென்றல் நலமளிக்கும் சீறிச் சுழலழிக்கும்
ஒன்றும் இரண்டும் உறைந்து. 353

காக்குமுயிர் நன்மருந்தைக் கைக்கும் எனச்சொல்லி
நீக்கிடுவார் யாருண்டு நேரியதோ — நோக்கிடுக
வேண்டார் குலத்துதித்த வேய்ங்குழலார் யாரவரே
தீண்டா மலருமுண்டே தேன். 354

பொல்லார் முயக்காழ்ந்து போற்றா புரிந்தாரை
நல்லாராய் மாற்றல் நனிப்பெரிதே — சொல்வாய்நீ
தீக்கினிமை தந்த திறனுடையார் தன்னையுடன்
நோக்க விழைவேன் நுவல். 355

**இளஞ்செழியன் காதற் கிடையூறாய் இன்னல்**
**உளஞ்சேர்ப்ப உண்டுபல உள்.**

எப்படிச் சொல்வனதை என்னுள்ளம் புண்ணாகும்
தப்பிழைத்தான் அப்போதும் தாழ்ந்தேனில் — இப்பொழுதே
குற்றமிலை என்றிடினும் கொள்வேன் தடுமாற்றம்
உற்றதும் ஏன்வாழ்வில் ஊறு. 356

வாலனுகும் தென்னிலங்கை மன்னனுக்கும் வாய்த்திட்டார்
காலனெனத் தம்பியர் கண்டுரைப்பீர் — ஞாலமிதில்
என்தம்பி போலமைவார் எத்தனை பேர்பெற்றார்
நன்றுமிகப் போற்றேனோ நான். *357*

(வாலன் — வாலி)

முன்பிறந்தோன் என்பதலால் மூத்தோன்நான் என்செய்தேன்
பின்பிறந்தோன் அன்றோ பிணையானான் — என்னிளையோன்
பெற்ற அருமகனைச் செற்ற பெரும்பகைவன்
சுற்றம் உறவாமோ சொல். *358*

தெங்கின் இளங்காயைச் சீவான் எனவெறிந்தான்
எங்கள் குலமுதலை ஏற்பததோ — வெங்கரிதான்
செய்தார் பிழைமறவாச் செய்கைபோல் எம்முறவோர்
கொய்தார் அவன்தலையைக் கொன்று. *359*

அன்னோன் மனைவியைத்தான் என்னருமை மைந்தனின்று
தன்னோளாய்க் கொள்ளத் தவித்திடுவான் — நன்மையதோ
கொன்றான் கொலைபட்டான் கொண்டிணைந்த பெண்ணவட்டான்
ஒன்றா துயர்ந்த உறவு. *360*

எச்சில் இலையன்றி ஏதும் இனித்தறியார்
மெச்சல் விருந்தமையில் மேன்மையிலை — நச்சியிவன்
கண்ணைக் கவர்ந்திட்ட கைம்பெண்ணைக் கைப்பிடிக்க
எண்ணுவதே எங்கட் கிழுக்கு. *361*

ஏதுமிலா ஏழையிலை ஏதிலியே என்றிடினும்
தீதெனினும் காதலெனின் சேர்த்திடுவேன் — கோது(று)
அணிற்கடித்த செங்காய் அவளோ மருமகளாம்
இணங்கற்கு நெஞ்சம் இறும். *362*

**காதல் உயிரியற்கை காண்பார் உணர்ந்துய்வர்**
**தீதில் திறனுக்குத் தேன்.**

அனைத்தும் பகுத்துணர்ந்த ஆசிரியர் மெல்ல
எனைத்தானும் நல்ல தியற்ற — நினைத்தாராய்க்
கல்லில் சிலைவடிப்பார் காட்டும் கவினென்னச்
சொல்லில் வடித்தார் சுவை. *363*

இறந்தார் பிறந்திடுவார் யாரறிவார் உண்மை
பிறந்தார் இறந்திடுவார் பிறழா(து) — அறிந்ததுதான்
ஆகையினால் உள்ளவரை அன்பு ப் பயிர்விளைத்(து)
ஈகையராய் வாழ்தல் இனிது. *364*

அன்பாசை யோடுடைமை ஆளுமை ஒன்றிணைந்(து)
இன்பம் உயரமைதி எஃதளிக்கும் — நன்றனையீர்
காதல் எனச்சொல்வேன் காமமும் அஃதேவாம்
பேதம் அதற்காகாப் பேற்று. *365*

ஊற்றெடுக்கும் காதல் உணர்வின் அடிப்படையில்
காற்றொக்கும் வாழுயிர்க்குக் காதலன்றோ — ஏற்றிடுக
போற்றும் உடலழகு தோற்றும் புலனுணர்வே
ஆற்றலமை காதற் கணி. 366

நீரின்றி நில்லா நெடும்பொழு திவ்வுலகம்
ஓரின் உயர்காதல் ஒத்ததுவே — பாரில்
ஒருவர்க் கொருவரிடை ஓங்கியெழு பூசல்
அருகிடும் அன்பால் அறி. 367

கொட்டாத்தேன் ஈயுண்டா கொள்வோமே தேனினையும்
ஒட்டார் இடத்தும் உறவினிக்கும் — எட்டா
உயரத் துலவும் ஒளிநிலவால் உண்டே
மயலகல மாணும் இயல்பு. 368

மாற்றான்றன் தோட்டத்து மல்லிகையே அப்பெண்தான்
போற்றாரும் போற்றுமரு பொன்னனையார் — தோற்றோடும்
மானும் மணிப்புறவும் மாங்குயிலும் மற்றையவும்
வானிலவும் நாணும் வடிவு. 369

**பெண்ணின் பெருந்தகையர் பெட்பு நிறையுடையர்**
**எண்ணில் எழிலார்க்கில் ஈடு.**

(பெட்பு — பெருமை, பேணுகை, அன்பு.)

எழிலி அவர்பெயரே ஏதமிலார் தூயர்
பழியுரையார் பாராட்டுப் பண்பர் — விழியுயர்த்திப்
பாரார் பரிவுடையார் பண்ணின் பனிமொழியார்
சேராரும் வேட்கும் சிலை. 370

அஞ்சுவ தஞ்சலலால் அச்சம் அறியாதார்
கொஞ்சுங் குரலோ குயிலிசைதான் — வஞ்சியவர்
மஞ்சு தவழ்வதுபோல் மாறன் இளஞ்செழியர்
நெஞ்சுள் நிறைந்தார் நிலைத்து. 371

பெண்மைக் கணியவரே பேசும்பொற் சித்திரமே
உண்மைக் கொளியூட் டுயர்மொழியே — கண்ணைக்
கவருமெழில் கள்ளங் கவடுமிலை காணின்
எவருமிலை அன்னார்க் கிணை. 372

தன்னைப் புனைந்தறியார் தங்கும் அழகுடையார்
புன்னைமரம் ஒப்பப் பொலிந்திடுவார் — அன்னை
அவருள்ளம் யார்க்கும் அருளில்லம் ஆகார்
தவறும் பொறுப்பார் தணிந்து. 373

எத்தனை நற்குடியர் எத்தனித்தர் அப்பெண்ணைத்
தத்தம் மகனார்க்குத் தாம்முடிக்கச் — சித்தத்தில்
பெற்றோர் இசைந்தளி பேறுற்ற மாமனன்றி
உற்றார் எவருமில்லை ஊங்கு. 374

(ஊங்கு — உயர்ந்து, மேம்பட்டு.)

அத்தை மகனவனே ஆனால் அயலவனே
தித்திக்கும் பேச்சில்லை தேடலில்லை — மொத்தத்தில்
மன்றல் நிகழ்பொழுதே மாமன் அருகணைந்தார்
உன்னிதனில் உண்டோ உயர்வு. 375

மாசு மறுவில்லா மாமணியைக் கண்டறிதல்
ஆசுணர் வல்லோர்க்கே ஆகுமிங்குக் — கூசிக்
குறுகக் குறைபலவும் கொண்டவரால் நல்லோர்
உறுதி உணர்தலோ உண்டு. 376

பைம்பொன் எழிலியவர் பண்பிற் பொழிலாவார்
கைம்பெண் எனினுங் களங்கமிலார் — ஐம்புல
ஆட்டங்கள் அத்தனையும் ஆளா அவரிடத்துக்
கோட்டமிலார் கொள்வார்க்குக் கொம்பு. 377

உன்னைப்போல் பிள்ளையிடம் உள்ளன் புடைபெற்றோர்
நன்மையன்றோ காதற்கு நாடிடுவர் — இன்னே
ஒருபிள்ளை நெஞ்சுள் உறைபவரை உன்றன்
மருமகளாய்க் கொள்க மகிழ்ந்து. 378

**அண்ணன் எதிர்முன் அதுவரை பேசாதார்**
**எண்ணம் உரைப்பார் எடுத்து.**

வந்த முதற்கொண்டு வாயைத் திறவாமல்
அந்தம் அறிய அமர்ந்திருந்த — விந்தையினர்
கண்ணனின் தந்தை கனைத்துக் குரலெடுத்(து)
அண்ணனிடம் சொல்வார் அமைந்து. 379

திங்களிலும் மாசுண்டு தீங்கனியும் கைப்பதுண்டு
தங்கல் இலையேதும் தாயன்பில் — எங்கும்
கடனறிந்து காக்கும் கதிரவனும் காரும்
உடனிணைந்தும் ஒப்பா உயர்வு. 380

நானறிவேன் அப்பெண்ணை நல்லவரே வல்லவரே
ஊனமெதும் இல்லை உயிர்க்குணத்தில் — ஆனவரை
கன்மனத்தான் என்மகன்தான் காதலித்தான் அப்பெண்ணோ
தன்மனத்தால் கொண்டாரில் தாழ்ந்து. 381

இப்போதுங் காதல் இளஞ்செழியன் கொண்டதன்றி
ஒப்பார் இவனினைப்பை உள்ளத்தில் — நப்போன்றார்
உற்றவர்க் கின்துணையர் உன்னார் ஒருபோதும்
பெற்றவர்க் கொவ்வா பிறழ்ந்து. 382

ஏற்பார் எனினிப்போ தென்மகற்கே இத்திருவை
ஏற்பேன் மனைவியென எண்ணலின்றிப் — பாற்போல்
வெளுத்த மனமுடையீர் வேண்டாவே காட்டும்
துளிர்க்கட்டும் அன்னோர் தொடர்பு. 383

**ஒன்றிணைந்தெல் லாரும் உகந்ததெனப் போற்றிடவும்**
**நன்றென்றார் தந்தை நகைத்து.**

என்னதான் நீங்களெலாம் எப்படிக் கூறிடினும்
உன்னிடா தென்னுள்ளம் ஒப்பிடவே — புன்னெறியில்
தோய்ந்து பகுத்தறிவைத் தோற்றோர்தம் மூடநெறி
தீய்ந்திடுமோ சின்னாளில் தேய்ந்து. *384*

காதற்குக் காரணமாம் கன்னியுடற் காட்சியெனில்
நோதுற்றே நூலாவார் நுண்ணிடையர் — தீதன்றோ
இக்கனியின் மிக்கவினி தின்னொன்று சிக்குதெனின்
அக்கனிக்கா சையுறினென் ஆம். *385*

திங்கள் சிலபொறுப்போம் தீமை இலையென்றால்
உங்கள் விருப்பிற் கொருப்படுவேன் — இங்கதற்குள்
உற்றார் அனைவருடை உள்ளார்ந்த ஏற்பினையே
பெற்றால் பிறக்கா பிழை. *386*

அன்புற் றமைந்த தருங்காதல் என்பதனால்
என்னொருவன் ஊடே இருப்பதுவே — அன்புடையீர்
செய்தக்க மேற்கொண்டு செய்திடுக என்றுரைக்க
எய்திட்டார் இன்பம் இயைந்து. *387*

# 16. இன்மனத்தாள் தந்த இசைவு

ஊசலிடு நெஞ்சை ஒருமைப் படுத்தற்கு
வீசிள தென்றல் வெறிகமழ்ச் சோலை
எழிலி ஒருபால் இயைந்திருக்க மெல்லச்
செழியன் அணைந்தான் திளைத்து.

**கள்ளம் இலாவுள்ளம் காதல் அடைந்ததனால்
கொள்ளும் பெருகு குறை.**

தாமரைத்தண் மொட்டிரண்டு தண்ணீர்த் தடத்திடத்துத்
தீமனத்தர் உள்ளமெனச் சேர்ந்தாடும் — தேமலுடை
மங்கையவள் மார்பகங்கள் வாங்கு வளிக்கேற்பத்
தூங்கி மிகுத்த துயர். 388

உள்ள உயர்பொருளில் ஒன்றலிலா உள்ளமின்றோ
கொள்ளற்குக் கூடாத கொண்டுலையும் — உள்ளதுவே
எட்டின் எரிசுடரை இன்னல் எனவறிந்தும்
விட்டில் விரையும் விழைந்து. 389

நல்லொழுக்கம் கல்வி நவையிலா நன்மேனி
செல்வம் உடையிணையர் சேர்ந்துறைந்தும் — செல்லலிலா
நல்லுள்ளம் இன்றெதற்கோ நாலுமுள புன்மையனைப்
புல்லியதும் ஆய்வாள் புலந்து. 390

( நாலும் — பகை, பாவம், அச்சம், பழி.)

ஒல்லான் உறவென்றும் ஒல்லா தென்றறிந்தும்
பொல்லான் நினைப்பே பொருந்துவதேன் — எல்லாம்
அவன்றன்னை நீர்த்தடத்தில் ஆடையிலா துண்ட
தவற்றால் விளைந்த தவல். 391

( தவல் — குற்றம், குறைவு.)

மேனி களனாக மீறியெழு காதலொன்றே
நானிலத்தில் ஒன்றி நலஞ்சேர்க்கும் — தேனிறைந்த
சொற்களென்றுங் காதல் சுவைசேர்க்கா சூடேற்றும்
புற்கலையே போற்றும் புகழ். 392

(புற்கலை — புல் + கலை = கூடற் கலை.)

**வெங்கதிரில் வேம்தளிரின் வேதனைப் பட்டிளைத்த**
**திங்களினைச் சேர்ந்தான் திளைத்து.**

நாறு மலர்த்தென்றல் நாடி உடல்நனைத்தும்
வேறு நினைவோடு வீற்றிருந்தாள் — ஆறு
பொருந்தா புரிந்தானப் புன்மாலைப் போதில்
இருந்தான்முன் கண்டாள் இலள். 393

(ஆறு — பக்கம்.)

அடுத்தடுத்தெண் ணங்கள் அலையலையாய் மோதிப்
படுத்த எழிலேதும் பாராள் — மடுத்தவனும்
பெண்ணெழிலாள் பேரழகைப் பேதுற்ற பண்பினனாய்க்
கண்ணிரண்டால் உண்டான் களித்து. 394

**இனந்தெரியா இன்னுணர்வை ஈந்தவெழில் காணக்**
**கனிந்ததே காமக் கனல்.**

செம்புச் சிலையுருவோ செம்பவளம் வாயிதழோ
எம்புபூம் பந்தோ எழில்மார்பம் — அம்பு
நுனிக்கூரோ அங்கயற்கண் நோக்கரு பூவோ
பனிக்கூர் பாவை முகம். 395

கோல எழிற்குலுங்கக் கோயிற் கலசங்கள்
சோலை புகுந்தவெனச் சூழ்ந்தமைய — மாலை
மலர்க்கூட்டம் நாண மகிழ்ந்தவளிக் கூட்டம்
குலைந்த செழியன் குணம். 396

வெம்மை சிறிதேற வெண்ணெய் உருக்குலையும்
கொம்மைமுலை விம்மக் குலையானோ — இம்மைப்
பெறற்கரு பெண்ணெழிலார் பேரின்பம் பேணார்
துறக்கம் புகினும் துயர். 397

(துறக்கம் — விண்ணுலகம், தேவருலகம்)

**தொட்டாற் சுருங்கியெனச் சோராள் தொடவும்புண்**
**பட்டாள் வெகுண்டாள் பதைத்து.**

சேர்வ துயிரென்றால் சேர்ந்துயிர்க்கும் மெய்யன்றோ
நேர்வ துணரான் நெருங்கிமிகச் — சோர்ந்திருந்தாள்
வெண்டை விரறபற்ற வேர்த்தாள் வெகுண்டார்த்தாள்
கெண்டைவிழி தீயாம் கிளைத்து. 398

தன்னந் தனியாளாய்ச் சார்ந்த இடந்தேடி
என்கை விரல்தொட்டீர் ஏற்பன்று — முன்னரே
கன்றிய நெஞ்சத்தீர் காத்து நடந்திடுக
நன்றிலா செய்தீர் நகர். 399

சிற்றூர்ப் பெண்ணென்ற சிந்தைச் சிறுமையினால்
உற்றாங் கொழுகிட்டீர் ஓர்வின்றிக் — கற்றாலும்
உண்மை அறிவே ஒளிருமாம் சான்றானீர்
புண்ணெஞ்சீர் நீங்கியெனைப் போம். 400

**கட்டுடலாள் கால்தொட்டும் காலால் உதைபட்டும்**
**ஒட்டடற் குருகும் உளம்.**

சித்திரை பெய்மழையால் சேர்ந்திடு வெம்மையுண்டோ
கொத்துமுட் பூவிதழுங் குத்திடுமோ — உத்திரத்துக்
கட்டிய தேனமுது கொட்டக் கசப்பதுவோ
சுட்டிடினும் சொற்கள் சுவை. 401

எழிலி இனியவளே எத்துணைத்தாம் என்மேல்
இழிமொழியை எய்திடினும் ஏகேன் — வழியிழந்த
வேலைக் கலத்திற்கு வெள்ளியொளி நீசேர
வேலை வருமோ விரைந்து. 402

**அட்டால் சுடும்பாலாம் ஆனால் எழிலிக்கோ**
**தொட்டால் சுடுநெருப்பாம் தோள்.**

இரவு பகலுறக்கம் இம்மியெனக் கில்லை
உருகுமுடல் காதற்றீ ஊற்றால் — அருகணைந்து
கட்டியணை என்றான் கனியுடலைத் தான்தொட்டான்
எட்டி அறைந்தாள் எழில். 403

**எட்டி பழுத்தாலும் ஈந்திடுமோ இன்சுவையை**
**ஒட்டுமோ உங்கட் குயர்வு.**

எட்டி இருமென்றே எச்சரித்தும் ஏற்றமின்றித்
தொட்டுத் துயரளித்துச் சூடுற்றீர் — பட்டுந்
திருந்தலிலா உம்மால் தெருவோர்தம் தீஞ்சொற்(கு)
எருவானேன் பேச இயைந்து. 404

பாழாம் பழக்க வழக்கங்கள் பாடுபட்டும்
வீழா எளிதில் விளங்கிற்று — கூழே
குடிப்பாருங் கொள்ளார் குணக்கேடர் கூட்டை
அடுப்பார்யார் உன்றன் அகம். 405

பட்ட மரந்தளிர்க்கப் பாய்ந்த பனிநீராய்க்
கிட்டிய தென்றே கிளர்ந்திட்டேன் — கெட்டனைத்தும்
விட்டிடா உம்முறவால் வேதனையே என்றாள்கை
பட்டறியா மேனி பதைத்து. 406

**தீண்ட வெறுத்துரைத்தும் தேனுடலார் உள்ளுணர்வு
தூண்ட உடைந்தாகும் தூள்.**

பட்டுத் தளிர்விரல்கள் பட்டதனால் மெய்சிலிர்க்கத்
திட்டத் திகைத்த செழியன்பின் — ஒட்டியிள
கட்டுடலாள் உள்ளம் கரையமுன் கற்றிருந்த
பட்டறிவைக் கொள்வான் படிந்து. 407

நெஞ்சமுனை அன்றி நினைக்காது வேறெதையும்
கொஞ்சுவதும் வாயுனையே கொண்டிடுக — துஞ்சிடினும்
தஞ்சம்நான் உன்னிடத்தே தாவேன் பிறரிடத்துக்
கெஞ்சிடுவேன் நானுரைப்ப கேள். 408

வேண்டாப் பொருள்வரவும் வீணர்தம் பொய்யுறவும்
தூண்டாமற் தூண்டத் துயருழந்தேன் — ஈண்டோ
பெறற்கரு நல்லுறவைப் பேரழகைப் பெற்றேன்
உறற்கென் உலகினி உண்டு. 409

ஆயிரங் கோடி அளவில் நிலவுகள்
ஆயினென் அத்தனை கோள்களும் — ஞாயிறு
தோன்றத் துலங்கா சுடர்விழி உன்னெதிர்
கான்றலில் மற்றோர் கவின். 410

(கான்றல் — வெளிப்படுதல்.)

தொட்டால் சுடுமென்பார் தொட்டதன்பின் சேய்தெளியும்
பட்டே தெளிந்தேன் பழிவிட்டேன் — நட்டால்
உயிர்வாழ்வேன் இல்லை உயிர்துறப்பேன் உன்றன்
துயர்நீக்கிச் சேர்கவென் தோள். 411

எண்ணேன் பிறபெண்ணை ஏறெடுத்தும் நேர்பாரேன்
நண்ணேன் எவரையுமே நம்புவெனை — கண்ணே
உனையல்லால் வாழ்வில் ஒருத்தியையும் உன்னேன்
எனையணைய இன்பம் இனி. 412

அழுவேன் தொழுவேன் அரற்றிப் பணிவேன்
எழுவேன் பரவி விழுவேன் — விழைவேன்
பொழிக தொடர்முத்தம் போதாகும் பொன்னே
பழுது வருமோ பகர். 413

அன்ன நடையறிந்தேன் அன்பேவுன் மென்னடையில்
கன்னற் சுவைகண்டேன் கண்ணேவுன் — சொன்னலத்தில்
தேனின் திறங்காணேன் செவ்விதழ்த் தெள்ளமுதை
வானின் அருளாய் வழங்கு. 414

பாலிரு நெய்யெனப் பைம்புனற் தண்ணெனக்
காலிரு வன்பெனக் கற்றோர்சொல் — நாலிரு
உண்மையென உற்றாய் உயர்தனிப் பேருருவாய்
அண்டியளி முத்த அருள். 415

**ஏற்றி உரைசொற்கி யாரொருவர் நேர்நிற்பார்**
**ஆற்றி இருந்தாள் அவள்.**

மெச்சி அவன்பேச மெல்ல மனம்நெகிழ
உச்சி குளிர்ந்திட்டும் ஒண்குணத்தள் — அச்சம்
மடம்நாணம் அத்தனையும் மாறலிலாப் பெண்மைக்
கடப்பாட்டால் காட்டாள் கனிவு. 416

எத்துணைத்தாம் ஏசிடினும் ஏளனமாய்ப் பேசிடினும்
சித்தத்தில் கொள்ளீர் சிறிதேனும் — எத்தர்நீர்
மெத்தப் பொதுப்பெண்டிர் மேனிப் புழங்கியதால்
முத்தத்தில் உள்ளதும் மூச்சு. 417

என்னெழிலை ஏற்றி எடுத்துரைத்த போற்றுதலால்
என்னை இழப்பேனோ என்றுமில்லை — என்வரையில்
தொன்மை மரபு தொடரும் இறுதிவரை
புன்மைப் புதுமை புரை. 418

**என்னை அடைதற் கியைந்த தொருவழியே**
**இன்னே மணத்தல் இனிது.**

களவியலைக் கற்றிருந்தும் காணேன் கயமை
உளமுடையார் உள்ளமையால் ஓர்க — இளமைக்
களமாகக் கொண்டு கலவிப்போர் ஆற்ற
உளதாம் திருமணமாம் ஓம்பு. 419

என்னை மணமுடிப்பீர் என்னபின் ஆகுமெனப்
பின்னர் அறிந்திடுவீர் பித்தாவீர் — நன்னர்
இயைபபல எண்ணிடுக என்றிட்டாள் சென்றாள்
செயலிழந்து நின்றானச் சேய். 420

(நன்னர் = நன்மை, ,நலம், மேன்மை)

**ஏற்பேன் எனைமணப்பின் என்றுரைத்த சொற்கேட்டுக்**
**காற்போல் மிதந்தான் களித்து.**

ஆடினான் பாடினான் ஆர்த்தெழு அன்பினான்
ஓடினான் உள்ள உவகையான் — நாடினான்
கூடிய தென்றிடு கொள்கையான் தேடினான்
சூடினான் பெண்ணாள் சுவடு. 421

# 17. அலரால் எழுந்த அலை

முட்கொம்பே ஆயிடினும் முல்லைக் கொடியணைய
உட்கல் இலையன்றோ உள்ள துலகியற்கை
கூடார் குலத்துக் கொடியோன் உறவிங்கு
வாடா மலராட்கு வாய்ப்பதுவோ ஆகா
ஒடிந்த உளத்தினராய் ஒல்லிடையாள் தன்னைக்
கடிந்திடுவார் அன்னை கனன்று.
(உட்கல் — நாணல், அஞ்சல்.)

**சொந்தங் குழுமியிரு சூழல் சுடுசொல்லைத்**
**தந்து தகித்தாளே தாய்.**

சேர்ந்திணைந் தெல்லாரும் நேர்ந்ததிங் கென்னென்று
தேர்ந்தாய்ந் தெழிலி திகைத்தாளாய் — ஊர்ந்த
உளத்துயரை உள்ளடக்கி உற்றாரை நோக்கத்
தெளித்ததாய் சொற்கள் தெறித்து. 422

கண்ணை இமைகாக்கும் கண்ணாய் உனைக்காத்தோம்
பண்பைத் துளைத்திடவோ பார்க்கின்றாய் — பண்ணை
இகந்தெழுவ பாட்டல்ல இன்மகளாம் நீயோ
இகழ்ந்த புரிந்தாய் இழிந்து. 423

யாரால் நிகழ்ந்ததி தென்நீ இசைந்ததுவும்
ஊரார் பழிதூற்ற உற்றதுவே — தேராய்
பகைவர் இடத்துனக்குப் பற்றெதற்குச் சொல்க
புகையுண்டோ தீயில்லாப் போது. 424

பூவிழந்தாய் பொட்டிழந்தாய் போகுமிடம் ஏதுமின்றிக்
கூவியழல் அற்றுக் குமைந்டுவாய் — யாவுமிவை
யாரால் எனவறிந்தும் இவ்வூர்ப் பொதுவிடத்து
நேராமோ பேசியதும் நின்று. 425

**அனலில் புழுவாக அல்லலுறு தங்கைதனைப்**
**புனலின் பொறுப்பான் புரிந்து.**

உள்ளத் துறுதுயரை ஓவியமாய் ஒண்முகமும்
தெள்ளத் தெளிவாய்த் தெரிவிக்கக் — கள்ளமிலாத்
தங்கை தவறிழையாத் தன்மையினைத் தானுரைக்க
மங்கை மகிழ்ந்தாள் மலர்ந்து. 426

அம்மா எழிலி அறிவுடையர் ஆற்றலுளர்
பெம்மான் உறையுள் பிழைபுரியாள் — வம்பாய்
எதிரே அவனிருந் தேதேதோ சொல்ல
மதியார் மொழிந்தார் மறுத்து. 427

கொன்றன்ன இன்னா கொடுத்தார் பகையெனினும்
நன்றல்ல செய்தல் நமக்கழகோ — ஒன்றில்லாப்
பேச்சைப் பெரிதாக்கிப் பெண்மனத்தைப் புண்ணாக்கும்
ஏச்சைக் குறைத்திடுக ஈங்கு. 428

பெண்ணின் உளமறிந்தா பெற்றோர் நடந்திட்டீர்
அண்ணனென் எண்ணம் அறிந்தீரா — கண்கள்
இரண்டிருந்தும் என்னபயன் ஈரவிழி சோரப்
புரண்டழுவார் தூக்கமும் போம். 429

மொட்டுப் பருவமதில் மூடன் செயலதனால்
பட்டுத் துயருழல்வார் பாரீரோ — தட்டு
நிறையுணவு பக்கம் நிறைந்திருந்தும் நேரா
நிறையுளர்க் குண்டோ நிறைவு. 430

உன்றங்கை இப்படியே உள்ளேங்கி உள்ளொடுங்கி
என்றைக்கும் வாழ்தல் இயல்பாமோ — என்றனையிங்(கு)
ஒன்றுமிய லாரும் உறுத்திடுவர் ஒன்றியுளம்
சென்றொருவர் சேரின் சிறப்பு. 431

கோயிற் கருவறையின் கொண்டா டிறையிவரோ
நோயுற் றதனால் நுடங்கியரோ — வாயில்
இவர்க்கிலையோ வாய்த்தோன் இறந்ததனால் நான்கு
சுவர்க்குள் அடைபடலோ சூழ்வு. 432

தன்னகவைப் பெண்டிரெல்லாம் தற்கொண்டார் தண்ணணைப்பில்
பொன்னிகர்த்த பிள்ளையுடன் பூரிப்பர் — என்னிளையர்
எல்லாம் இயைந்திருந்தும் இல்லாத் துணையவனால்
இல்லாராய் நிற்பாரே என். 433

மலர்தல் மணம்பரவல் வண்டுவந்துள் தோய்தல்
அலர்தல் உயிரியற்கை ஆகும் — நலந்தரு
நில்லா இளமைநலம் நீர்மேல் எழுத்தன்றே
எல்லார்க்கும் நன்றாம் இயல்பு. 434

யாரோ ஒருவனெதிர் என்தங்கை பேசியதால்
வாரா பழியெவையும் வாடற்க — தீராத்
துயரில் துடித்திடுவார் சோர்விகந்து மீள
இயலுவதைக் காணல் இனிது. 435

கொண்டோன் தனைநீக்கிக் கொள்வார் மறுமணமே
உண்டே நடைமுறையும் ஒப்புவமே — வண்டூதா
நாறா மலரிருந்து நல்கும் பயனென்ன
ஊறாம் தனித்திரு உய்வு. *436*

**பொன்னேர் எழிலி புகைந்து புழுங்குதற்(கு)**
**அன்னை அழுவாள் அயர்ந்து.**

முத்தாய்ந்து கோர்ப்பரென முத்தெடுத்துச் சாற்றிடவும்
கத்தாக் கடலானார் காத்திருந்தார் — எத்தாலும்
மூடப் பழக்கத்தில் மூழ்கி அமிழ்ந்தவரால்
வீடல் இலையன்றோ வீம்பு. *437*

பேசார் பிறரெனினும் பெற்ற துயருழற்றக்
கூசார் கருதுவதைக் கூறற்கும் — ஊசாடு
நெஞ்சத்தார் எண்ணம் நிலைப்படவே நீட்டிடுவார்
அஞ்சொல்லால் அன்னை அளந்து. *438*
*(ஊசாடு — ஊசலாடு, உலாவித் திரி.)*

பூவோடும் பொட்டோடும் பொன்நாண் கழுத்தோடும்
மேவோமோ கல்லறைக்கு வேண்டிடுவார் — தாவேது
கொண்டார் இறந்துபடின் கொள்துயரின் மிக்கதுயர்
உண்டோ உலகியலில் ஒப்பு. *439*

ஆண்டு சுவையுண்ட அன்னையர்க்கும் ஆவதில்லை
ஈண்டென் மகட்கும் இயலுவதோ — வேண்டிடுவேன்
கட்டி அணையுமுனே கட்டையில் போனவனால்
பட்டமரம் ஆவதோ பாங்கு. *440*

தீண்டா ஒருவன் தெருநடுவே பேசியதால்
வேண்டா உரைத்ததலால் வேறில்லை — ஆண்டாண்டாய்
அல்லற் படற்கோ அழகு மகளிங்கு
நல்ல நடத்தலே நன்று. *441*

கண்ணார் கனியன்ன கட்டியவள் காத்திருக்கப்
பெண்ணார் பிறர்வேண்டிப் பின்னலைவார் — கண்கூடு
யாரெதிர் வந்திடினும் ஏறெடுத்தும் பார்த்தலிலாப்
பேரமைதிப் பெட்பென்றன் பெண். *442*

நேற்றுவரை மாற்றார் நிழலும்மேல் பட்டறியா
நோற்ற எழிலியென் நொந்ததுவும் — ஆற்றுவனோ
எஃகை எலிதின்னா ஈரவளி கொள்ளுமன்றோ
அஃதே அளிக்கும் அழுங்கு. *443*
*(அழுங்கு — துன்பம், மிகு வருத்தம்.)*

அறத்தாற் பொருளீட்டி அப்பொருளால் இன்பம்
சிறத்தலே வாழ்வென்றார் சென்றார் — அறுத்ததனால்
எல்லாரும் வேட்டுவக்கும் இல்லின்பம் என்மகட்(கு)
இல்லாமற் போவதுவோ ஏற்பு. *444*

**கொம்பிழந்தால் வாழ்க்கை கொடிக்கிழப்போ குன்றிடுமோ**
**எம்பிடுமே இன்னொன்றை ஏற்று.**

அத்தை தமிழ்ச்செல்வி ஆற்றார் குறுக்கிட்டார்
வித்தை மொழிபேசல் வேடிக்கை — மெத்த
பழுதென்றாய் நன்முத்தைப் பாராட்டோ பின்னர்
முழுமையிலை உன்றன் மொழி. 445

எழிலியென் இன்மருகி என்மைந்தன் ஏக
வழியிழந்து வாடிடுவாள் மானாய் — விழுமியதோ
வேண்டா மணமென்றாள் வேட்பாள் ஒருவனெனின்
வேண்டா எனல்தகுமோ வேம். 446

கொம்பிழந்த பூங்கொடிக்குத் தேவைமறு கொம்பென்பாய்
கம்பொன் றதுபற்றின் காய்ந்திடுவாய் — செம்மையதோ
நெஞ்சிற் குகந்தானை நேரிழை நாடுவதால்
அஞ்சற் கிடனே தறை. 447

தன்னொத்த பெண்களெலாம் தத்தம் குழந்தையொடு
அன்புற்ற இல்லறத்தில் ஆழ்ந்திருப்பர் — என்னருமை
அண்ணன் மகள்மட்டும் அந்தோ நடுகானின்
வெண்ணிலவோ தண்காற்றோ வீண். 448

எல்லாம் எழிலறிவாள் என்றும் பழிபுரியாள்
நல்லா றிலாவெதும் நாடாளே — ஒல்லாரும்
நல்லாராம் நம்மெழிலி நட்பைப் பெறுவாரேல்
நில்லா அருளல்ல நேர். 449

தேரார் நிலத்துவிளை தீங்கனிகள் கைப்பவையோ
நேரார் குலத்துள்ளும் நீர்மையுண்டு — ஆராய்க
யாராய் இருந்தாலென் ஏற்பாள் எழிலியெனின்
வாரீர் முடிப்போம் வரிந்து. 450

**கட்குடியைத் தேருவரோ கன்னலினி சாறிருக்க**
**முட்கொம்போ முல்லைக்கு முட்டு.**

அத்தை மனக்கருத்தை ஆமாமென் றங்காரும்
மெத்த தலையசைத்து மேலென்றார் — ஒத்த
உளங்கொண்டும் உண்மை உணர்ந்தவராம் அன்னை
விளம்பிடுவார் மென்மை விடுத்து. 451

அண்ணி அறியாமல் ஆகாத கூறிடுவீர்
எண்ணியலோ யாவும் எடுத்துரைத்தேன் — மண்ணிலுறு
மாமழையாய் என்வயிற்றில் வந்துதித்த தூமணியும்
தீமையுற ஒப்பேன் தெரிந்து. 452

கன்னி கழியுமுன்னர்க் கைபிடித்தோன் பட்டொழிந்தான்
என்னுறுவள் என்றே இடருற்றேன் — இன்னிலையில்
நாட்டம் ஒருவனிடம் நங்கை அடைந்தளெனில்
வாட்டம் எனக்கேன் வரும். 453

வாடிக் கிடந்தபயிர் வான்மேகம் கண்டக்கால்
ஆடிக் களிக்காதா அப்படித்தான் — கூடிக்
குழுமியதும் கொண்டலிலை கொல்தீப் புகையாம்
அழுதிடும் அஞ்சி அகம். 454

யாரவன் எப்படி ஏதும் அறிந்தீரில்
ஊரவர் சொல்லேனும் ஓர்ந்திடுக — ஈரமிலா
வன்மனத்தர் தன்மரபில் வந்துதித்த கன்மனத்தன்
நன்னடத்தை இல்லானே நம்பு. 455

நல்லாணாய் இல்லெனினும் நல்லானே நம்மவர்க்கும்
பொல்லானாய் இல்லானாய் உள்ளானால் — ஒல்லாதே
வேங்கையிடை வெள்ளாடும் வேண்டா விலைகொடுத்துத்
தீங்கைப் பெறாரே தெரிந்து. 456

என்மருகன் நீபெற்ற இன்மகனார் ஐயனரு
பொன்னுடலைக் கூறிட்ட புன்றொழிலர் — நன்றறியார்
நீடுபழி நின்றட்ட நெஞ்சத்தார் மீளுவரோ
ஆடுபகை குட்டியிடம் அன்பு. 457

கொண்டானைக் கொன்ற கொடியோர் குலத்தவனைக்
கண்டாங்குப் பேசிக் களிப்பதுவோ — உண்ணோவும்
விண்டோதற் கில்லா வினையுடையான் புன்னுறவால்
உண்டோ எழிலிக் குயர்வு. 458

கொல்லும் பகையிடையே கூடா மணவுறவு
அல்லும் ஒளியும் அணையாதே — சொல்லுகநீர்
மேகம் ஒளிமறைக்கும் மீண்டொளிரும் வீண்பழி
ஆகம் அதுபோன்றே ஆம். 459

(அல் — இருள்; ஆகம் — நெஞ்சம்.)

## 18. துவைத்தும் வெளுக்காத் துணி

இனிது நடத்தற் கியைந்த துரைக்க
நினைவெலாம் தானேயாய் நின்றாட் கெதிரானைப்
பேசற் கிடங்கொடாள் பெய்பேய் மழையெனவே
ஏசி இழித்தாள் இகந்து.

கோயிற் புறச்சுற்றில் கோவேந்தன் பேருடையான்
வாயிற் வேண்டி வழிமறித்தான் — தாயிற்
சிறந்தெழிலி கொண்ட சினமறைத்துக் கண்ட
அறந்தெளியச் சொல்வாள் அவற்கு. 460

பட்ட மரந்துளிர்க்கப் பண்ணீர் வழிமுறையை
வெட்டி விறகாக்க வேர்க்கலைவீர் — கொட்டுங்கீழ்
எச்சில் இலையானோ பிச்சைப் பொருள்தானோ
கொச்சைப் படுத்தலோ கோள். 461

என்னகத் தாசை எடுத்துரைத்துஞ் செய்கையின்றிக்
கன்னம் இடுபவர்போல் காதிடுவீர் — இன்னலும்மால்
ஊரார் ஒருபோகாய் ஓரவிழி ஓட்டிடுவர்
யாரால் இயைந்த இழிவு. 462
(காதுதல் — கொல்லுதல், கூறிடுதல்.)

தாய்தந்தை உற்றாரும் சாடிடுவர் உன்னுறவை
ஓய்வில்லை நெஞ்சிற் குறக்கமில்லை — தேய்கின்றேன்
சொந்த அறிவுமில்லை சொற்பேச்சும் கேட்பதில்லை
நொந்துமென் நூலானேன் நோற்று. 463

என்னிடத்துப் பேசல் இறுதியுமக் கிஃதேயாம்
முன்னுற நீர்முனையின் முற்றாகும் — உன்னிடுக
நன்முறையில் நாமிணைய நாளும்நான் முன்சொன்ன
இன்னெறியை ஓர்க இனிது. 464

கண்ட பொழுதிருந்து காதலித்த துண்மையெனில்
விண்டுரைத்த கொண்டு விளைத்திடுக — பண்டு
சுவைத்த நறவெண்ணிச் சுற்றிடுவீர் ஆகில்
துவைத்தும் வெளுக்காத் துணி. 465

மீண்டுமுமைச் சந்தித்தல் மேடையில்தான் இல்லையெனில்
கூண்டிலடை கிள்ளை குமைந்தழிவேன் — வேண்டிடுவேன்
தீண்டத் தகாளென்ற தீமொழிக் காளாகத்
தூண்டற்க என்னைத் தொடர்ந்து. 466

பேச்சிற் கெதிர்பேச்சு பேசற் கிடமின்றி
வீச்சுநடை இட்டு விரைந்தாளை — மூச்சு
விடற்கும் மறந்தானாய் வேடிக்கை பார்த்தான்
கடக்கரு காமம் கடு. 467

(கடு=நஞ்சு)

# 19. நாடுக நம்மோர் நலம்

ஏதிலார் என்றிடினும் ஏற்பார் எழிலியினைத்
தீதுறா அன்னோர் திருமணத்திற் கொப்பிடுதல்
பிள்ளை விருப்பறிந்து பெற்றோர் இருபகையைத்
தள்ளி வரவுள்ளார் தாவில் தடைவேண்டா
கொண்டான் இறந்ததனால் கொண்டதுயர் கொஞ்சமில்லை
உண்டோ இதனினோர் உய்வு.

**கூடும் மறுமணமே கூடார் அவரெனினும்**
**நாடல் நமக்கே நலன்.**

அம்மா கயற்கண்ணி அண்ணன் உரைகேட்டும்
சும்மா இருப்பதுவோ சொல்லிடுக — வம்பீதோ
ஆடுபகை குட்டியுற வாவ தியலுவதே
நாடுவோம் நம்மோர் நலம். 468

பட்டவன் என்மகனே பந்தத்தில் உன்மருகன்
பட்டதுயர் என்னினும் பன்மடங்கே — விட்டகலா
போனவன் போனவன்தான் போதாய்ப் பொழில்மலரும்
தானிருப்பின் உண்டோ தகை. 469

(தகை — பெருமை, நன்மை, அழகு; போது — அரும்பு.)

யாரோ ஒருவர்க் கெழிலியை ஈவதினும்
நேராம் விழைவோர்க்கு நேர்ந்திடுதல் — பாராய்
நடுகால் ஒடித்தருகே நாட்டுதலின் நன்றே
கொடிநாடு கொம்பைக் கொளல். 470

பள்ளத்தில் நீர்பாயும் பார்க்கா திடத்தகுதி
கள்ளமிலாக் காதற் கவினதுவே — உள்ளத்தில்
எண்ணியிங் கோராணை இன்றுணையாய் ஏற்றதன்பின்
நண்ணுவரோ இன்னொருவர் நட்பு. 471

உன்கணவர் பிள்ளைமற் றுற்றார் உறவினினும்
உன்னொருத்தி ஏற்பொன்றே ஒப்படையாம் — உன்னிடுக
பெற்றவொரு தாயன்றிப் பெண்ணின் நலம்மேலாய்
உற்றிடுவார் யாருலகில் உண்டு. 472
(ஒப்படை — ஒப்பளித்தல், கட்டளை நிறைவேற்றல்.)

கொன்றவர்தாம் இன்னா கொடுத்தவர்தாம் என்றிடினும்
நன்றலவோ வாவென்றல் நாடிவரின் — சென்றவெலாம்
சென்றவையே சேர்ந்தடையா சேரும் எழில்வாழ்க்கை
ஒன்றுநன் றோதின் உயர்வு. 473

**மாமனுரை யாரும் மறுக்கார் மகிழ்வரெனத்**
**தீமனத்தள் கொண்டாள் தெளிவு.**
(தீ — இனிமை, அறிவு.)

கேட்டிருந்தார் எல்லாரும் கேட்டாள் எழிலியுமே
போட்டிருந்த பொய்வேடம் போனதுமே — வாட்டுமுளக்
காதற் களிவாழ்க்கை கால்கொண்டு பாய்ந்ததெனத்
தீதற் றினித்தாள் சிவந்து. 474

அன்னையுளந் தேரா அறியாச் சிறியவளோ
என்ன நடக்கும் எழிலறிவாள் — முன்னர்த்
தடைசிலவும் சாற்றிடினும் தன்மகளின் நன்மை
உடையளன்றோ நெஞ்சுள் ஒளித்து. 475

**எழிலிக் கெதுவேற்போ ஏற்பெனக் கென்று**
**வழிமொழிந்தாள் அன்னை வளைந்து.**

தீயரவர் என்று தெரிந்தோர் உரைத்ததனால்
தாயுணர்வில் சற்றுத் தயங்கிட்டேன் — ஆயினவர்
பெண்ணாள் உளமணையும் பேறுற்றார் என்பதனால்
உண்ணான் மகிழ்வேன் உணர்ந்து. 476

நல்ல நடக்குமெனில் நானோ இடைநிற்பேன்
அல்ல விழைத்தோரே ஆவலுடன் — இல்லம்
இவணேகின் இன்முகத்தோ டேற்றெதிர் நிற்பேன்
கவலேல் விருந்தோம்பற் கண். 477

# 20. கனிந்தது காதற் கனி

தந்தைதாய் ஆசான் தகுவுறவோர் நல்லோரை
முந்தையவன் கொண்ட முடித்தற்குச் சேர்ந்தொருங்கு
வந்தணைந்தார் நல்லாள் மனைக்கு..

**வந்தார் வணங்கி வரவேற் றுவந்துமிகத்**
**தந்தார் விருந்து தக.**

வருக வருக வணக்கம் வருக
பெருகும் மகிழ்ச்சி பிறங்கும் — துரும்பினி
நம்மிடை சூழ்ந்த நலமில் பகையுணர்(வு)
இம்மையில் இன்பம் இனி. 478
(பிறங்கும் — ஒளி விளங்கும்.)

தங்கை தமிழ்ச்செல்வி தம்பீஇ தாளாளா
எங்கே இருக்கின்றீர் எல்லாரும் — இங்கணைக
வாராதார் வந்துள்ளார் வந்து வரவேற்பீர்
தீராத் துயர்க்கமையும் தீர்வு. 479

எல்லாரும் வந்தார் இனிது வரவேற்றார்
சொல்லாடி வேட்டுச் சுவையுண்டார் — நில்லாது
வல்லார் தமிழாசான் வந்த கரணியத்தைச்
சொல்வார் மெதுவாய்த் துணிந்து. 480

**நெருடல் எதுவுமின்றி நெஞ்சுள் இருப்பவற்றைச்**
**சொல்லத் தொலைந்தது சோர்வு.**

சூலுற்றுக் கார்மேகம் சூழ்ந்து மறைத்திடினும்
காலுந்த நீங்கும் கதிரொளிரும் — மாலுற்(று)
எழிலி துணைவேட் டெழுந்தபகை போயிற்(று)
எழிலிக் கிடரினி இல். 481

ஓரினந்தான் எல்லாரும் ஒன்றா இடைத்தடையே
நேரினும் நில்லா நிழலொளியில் — நீருணர்ந்து
சேர்ந்த இருமனத்தார் சேரத் திருமணத்தைத்
தேர்ந்து நடத்திடலே தீர்வு. 482

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லையென்பார்
ஆயினஃ துண்மை அறியார்யார் — சேயின்
நலமன்றி வேறெதிலும் நாட்டமிலாய் சொல்க
சொலவுளத் துள்ள தொடுத்து. 483

**சான்றோன் உரைத்த சரியெனினுந் தான்கொண்ட**
**ஈன்றோள் உரைப்பாள் எடுத்து.**

கரும்பாய் இரும்பைக் கருதிக் கடிப்பின்
விரும்பா வினையே விளையும் — அரும்பாம்
எழிலிக் கிவரும் நிழலா அழலா
உழலும் மனமும் உலைந்து. 484

கற்றிருந்தும் பற்றிருந்தும் காணும் பயனென்ன
நற்றுணை யன்றோ நலனளிக்கும் — முற்ற
விழுப்பம் பலவிருந்தென் வேதனைதான் மிஞ்சும்
ஒழுக்கமலோ வாழ்விற் குயிர். 485

(பற்று — செல்வம்.)

காம எழுச்சியினைக் காதல் எனக்கொள்ளல்
தீமை தருமன்றோ தீர்ந்திட்டால் — தாமரைப்
பூவன்னாள் பின்னாள் பொலிவிழந்தால் மாற்றாள்மேல்
தாவினவர் என்னாம் தளிர். 486

**நற்றாய் உளக்கருத்தை நன்றாய்ந்த நற்கிள்ளி**
**சொற்றார் படைப்பார் தொடுத்து.**

(சொற்றார் — சொல் + தார் — சொன்மாலை)

குற்றம் எதுவுமில்லை கூறு மொழியுண்மை
குற்றம் நினைத்தோரின் சுற்றமில்லை — எற்றுணையும்
பொல்லாங்கு சேரப் பொறுப்போமோ உங்குடிக்கு
நல்லாரே எல்லாரும் நாடு. 487

(நினைத்தோரின் — நினைத்து + ஓரின் — நினைத்து ஆராயின்.)

காமம் மிகவழகு காணில் அகவுயர்(வு)
ஏமப் புணையஃ திணையில(து) — ஆமதுவே
ஆழ்ந்தார் அதிற்படுவர் ஆகார் கதைவிடுவர்
வீழ்ந்தார்யார் உண்டு விரும்பு. 488

காமமிலாக் காதலிலை காமத்தால் காதலுண்டு
காமம் அடிமனையாம் காதற்குப் — பூமலராம்
ஏமமிலா உள்ளன்பும் என்றுமிள நன்னினைப்பும்
காமநுகர் விற்கிரு கண். 489

(ஏமம் = மயக்கம்)

நில்லா உலகியலில் நிற்கும் புகழல்லால்
எல்லார் மனத்ததாம் இன்காதல் — நல்லோய்நீ
காதல் உயிரியற்கை காணார் பதரிணையே
ஓதல் உணர்ந்தறிக உற்று. 490

**பெண்ணின் பெருவாழ்வே பேறாம் பிறிதில்லை
எண்ணி அளித்தார் இசைவு.**

ஆன்றமைந்த சான்றோர்நீர் ஆவ துரைத்ததன்பின்
ஈன்றவள்நான் கூறவிங் கென்னுண்டு — பான்மனத்தர்
கோரும் மணவுறவு கூடட்டும் நம்மிடையே
தீரும் பகையுணர்வு தீய்ந்து. 491

# 21. கற்பளி காமக் களிப்பு

*கட்டிப் பாற்செம்பு கையிரண்டில் கண்ணிரண்டில்
மட்டில் எதிர்பார்ப்பு மார்பில் துடிதுடிப்பு
பட்டுப் புடவையுடல் பல்லணிகள் மின்மினுப்பு
மெட்டி ஒலியெழுப்பு மென்னடைக் கின்னலுறு
ஒட்டி உருவிளைத்த ஒல்லிடைக் காற்றானாய்
எட்டி அணைத்தான் எதிர்.*

கட்டிப் பாற்சொம்பு கையிரண்டில் கட்டுள்ளில்
மட்டில் மதமதர்ப்பு மார்பிரண்டோ — கட்டறுக்கும்
தட்டிற் சுவைபலவும் தாங்கித் தவழ்ந்தசைவாள்
கட்டிற் கமைந்த கனி. 492

இல்லா இடைமெலிய ஏந்து முலையிரண்டும்
கொல்லாமற் கொல்ப கொடியோயே — பொல்லாய்நீ
முன்னர்க் குடமிரண்டில் மூடிவைத்த பாலிருக்க
இன்னுமேன் சொம்பொன்றில் இங்கு. 493

தேனே திரட்பாலே தெள்ளமுதே தீங்காற்றே
மானே மணிப்புறவே மாங்குயிலே — யானேர்ந்த
கண்ணே கவினழகே காமர் கனியுருவே
நண்ணேன் இனியொருவர் நட்பு. 494

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றினிக்கும் ஒண்கலையும்
கொண்டுநீ ஒருருவாய்க் கூடிட்டாய் — பண்டுநான்
என்றும் சுவைத்தறியா இன்னுணர் வுன்னுறவால்
ஒன்றும் உயிருள் உறைந்து. *495*

ஆறு கடல்கூடும் அங்கனியோ மண்ணாடும்
நாறுமலர் நாடுவதோ ஞாயிற்றே — கூறவரு
புன்னகையே பொன்னகையாய்ப் பூண்ட எழிருலுவே
உன்னையே சேர்ந்த துயிர். *496*

என்ன நடந்ததிங் கேன்கீழ்க் கிடப்பதுவும்
பின்னி உடல்வீழ் பிறங்கலெது — நின்றுநிலை
குன்றிரண்டு கீழ்நோக்குக் கோலம் முதன்முதலாய்
ஒன்றியனாய்க் கண்டான் உவந்து. *497*

(பிறங்கல்— பிறங்குதல் = நிலை மாறல்)

வண்டு மலர்தோயும் வானீர் குளம்பாயும்
பண்டு முதலியற்கைப் பண்பாகும் — மண்டும்
உயிர்க்குணத்தில் மாற்றம் உறுவதில்லை அன்னோள்
முயக்கத்தில் மேல்கீழ் முரண். *498*

கூடுங் குளத்துள் குளிப்பார் அமிழ்ந்தாடல்
நாடுங் குளமோ நனைத்தற்குத் — தேடும்
உலக்கை உரற்குத்தக் குத்துரலை ஆங்கே
உலக்கையெனக் கொண்டான் உவந்து. *499*

பையரவு நீட்கயிறாய்ப் பாற்கடலே கொள்கலனாய்
மைமலையே மத்தாய் மடுவமுதம் — கைகயிறாய்க்
குன்றிரண்டால் குத்திக் குதிகடலால் கோல்நனைக்க
ஒன்றியெழு இன்பிற்கோ ஒப்பு. *500*

ஒத்தமைந்த அன்பால் ஒருவன் ஒருத்தியுடன்
நத்தியணை கூட்ட நலனுரைத்தல் — எத்திறத்தும்
துய்த்தார்க்கும் இல்லையெனும் தொன்னூல் முடிபுரைகள்
பொய்த்திடா சொல்லப் புகின். *501*

**முற்றிற்று.**

# இயற்றிப் பாவியத்திற்கு வேண்டாவென்று விலக்குற்ற பாடல்கள்

வீட்டின் வெளிப்புறத்தே வெய்யில் விழுமிடத்தே
கூட்டுக் கொலைபுரிவோர் கூடலென — வாட்டமுறை
கண்ணனுடன் தந்தை கலந்துரை யாடுவதை
எண்ணான் செழியன் இருந்து.

ஆசான் எடுத்துரைத்த அத்தனையும் உள்வாங்கிக்
கூசாது கேட்டுக் குனிந்திருந்தான் — பேசானோ
என்றெண்ணி யாரும் இளஞ்செழியன் கண்பார்க்க
நன்றுற்றான் சொல்வான் நயந்து.

நில்லா உலகியலில் நிற்கும் புகழல்லால்
எல்லார் மனத்துமுள தின்காதல் — நல்லோய்நீ
காதல் உயிரியற்கை காணார் பதரிணையே
ஓதல் உணர்ந்தறிக உற்று.

தம்பியுளப் பெட்பைத் தமையன் அறிந்துவந்தும்
உம்மென் றொருசொல் உரையாதார் — அம்பு
விடப்பட் டிலக்கை விலகலெனச் சொற்கள்
தொடுபட் டளித்த துயர்.

ஆறு கடல்கூடும் அங்கனியோ மண்ணாடும்
நாறுமலர் நாடுவதோ ஞாயிற்றே — கூறவரு
புன்னகையே பொன்னகையாய்ப் பூண்ட எழிலுருவே
உன்னையே சேரும் உயிர்.

ஒருத்தியிலை பல்லோரை ஓராணிங் கேற்க
ஒருத்திக்கு மட்டுமேன் ஓராண் — பொருந்தா
ஒருத்திக் கொருவன் உயர்ந்ததுவே உற்றோன்
மரித்தால் மறுமணமே மாண்பு.

அழகுப் பொருளிலெலாம் ஆசையெழல் உண்மை
பழகுமாண் பக்கம் பரவா — கழுகு
மனங்கொண்டார் பெண்கள் மடியடைய சுற்றும்
இனங்காணல் யார்க்கும் எளிது.

ஆசையுறு பெண்ணிடத் தன்பிருக்கத் தேவையில்லை
வேசையிடம் அன்பிரா வேட்கையிரும் — மாசைத்
துடைத்ததுடன் கொண்ட துயர்கலைத்த பெண்மாட்(டு)
உடைத்தகத் தன்பே உயர்ந்து.

இங்கெங் கெனாதபடி எங்கும் ஒளிப்பிழம்பாய்த்
தங்கும் இறைத்தன்மை தானறிந்தார் யாருள்ளார்
கண்ட நாள்முதலாய்க் கண்டானில் வேறெதையும்
ஒண்டொடியாள் இன்னுருவே உண்டு.

ஊருக்குஞ் சேரிக்கும் ஊடே பெருவெளியில்
யாருக்கும் நேரொக்கும் ஈசன் திருக்கோவில்
ஈரேழ் இராப்பொழு தேற்ற மிகுவிழவில்
சேரார் இலரதுவே சீர்.

வீதியெலாம் தோரணங்கள் வீட்டெதிரே மாக்கோலம்
தீதிலார் தேரோட்டம் தேடிளைஞர் கண்நோட்டம்
கோவிற் வெளிப்புறத்தில் கொண்டாட்டம் உள்மணக்கும்
தூவு திருநீற்றுத் தூள்.

சிற்றூர்த் திருவிழாக்கள் செல்வச் செழிப்பினரின்
கற்றாலும் வீடகலாக் கட்டுடலப் பெட்பினரைப்
பைய அருகிருந்து பார்த்துப் பருகுதற்குப்
பொய்யர் வகுத்தளித்த போக்கு.

இடையறா இன்னட் கிலக்கானான் ஏங்க
இடையசைய மேல்குலுங்க ஈர இதழ்மின்ன
நடைபழக வந்தவெழில் நாணி நகைக்கவுயிர்
உடையனென நின்றான் உயர்ந்து.

கண்ணின் கடைப்பார்வை காணாக் கடுந்துயரால்
அண்ணன் நிலையுணர்ந்த அன்னைதந்தை சுற்றமுடன்
பெண்கேட் டெழிலிதன் பெற்றோர் தமைவேண்டிக்
கொண்டார் மணநாள் குறித்து.

ஏழை படுவுழைப்பில் ஏய்ப்பர் பிழைப்பரன்றோ
தாழையுறை பாம்பனான் தாழ்குழலாள் அத்தைமகன்
எல்லாமே ஒன்றாய் இயைந்துவரு இன்பொழுதில்
பொல்லாங்கு சூழ்ந்தான் புகுந்து.

எழிலி இருந்திடுக ஈதோநான் செல்வேன்
பழுது விளையாது பார்ப்போம் அவன்செயலை
எட்ட ஒளிந்திருப்பேன் எல்லாமும் பார்த்திருப்பேன்
விட்டறிவோம் கொண்ட விளைவு.

இருவர்க்கும் ஓரகவை ஏனிங்குப் பேதம்
ஒருமையில் பேசிடுக ஒன்றாது போலிமையே
பீடிகை ஏதுமின்றிப் பேசிடுக என்தோழி
கூடற் கிருப்பதையே கொண்டு.

அறியாப் பருவம் அடுத்தடுத் தாகாச்
சிறுமை புரிந்திடு சீற்றம் தவிர்க
கரந்தழகைக் கண்ட கயமையால் காதல்
இரந்திங் கிருப்பேன் எதிர்.

காமம் மிகவழகு காணில் அகவுயர்(வு)
ஏமப் புணையஃ தியையின் இணையில(து)
ஆழ்ந்தார் அதிற்படுவர் ஆகார் கதைவிடுவர்
வீழ்ந்தார்யார் உண்டு விரும்பு.

எரிவுணர் வுந்த இணைந்தாரீர் உள்ளம்
திரிதலில் மெய்யுறவில் சேர்ந்திடச் சேரின்பம்
இன்பத்துட் பேரின்பம் எல்லார்க்கும் ஏற்றததே
அன்பலால் வன்பிலை ஆங்கு.

காமமிலாக் காதலிலை காமத்தால் காதலுண்டு
காமம் அடிமனையாம் காதல் அதிற்கோட்டை
ஏமமிலா உள்ளன்பும் என்றுமிள நன்னினைப்பும்
காம நுகர்வுக்குக் காப்பு.

உன்னை அவன்பேச் சுலுக்கி உறுத்தியதோ
என்னமைதி கொண்டிங் கிருந்திடுவாய் — இன்னும்
அவனினைப் பல்லல் அளித்திடுதோ அன்றி
உவகை தருதோ உரை.

இடையி லொருகுடமு மின்னுமிரு சொம்பும்
உடையளிவள் மேனி உறுதிக்கோர் காட்டாம்
தடையாம் சடையென்று தாழ்குறைப்பார் தம்மின்
இடையாற் சிறந்தா ளிவள்.

**முற்றும்.**